



வாராந்த மின்னிதழ்

உண்மையின் முகம்

# கல்முனை NET

kalmunainet.com e paper






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம் | பிலவ வருடம் ஆவணி 26 (11.09.2021) இதழ் : 30


# சாணக்கியன் குற்றச்சாட்டு; சுயாதீன விசாரணைக்கு

# கிழக்கு ஆளுநர் உத்தரவு!




(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அண்மையில் நாடாளுமன்றத்தில் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பாக சுயாதீன விசாரணையை மேற்கொள்ளுமாறு கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்,

02



## ஊரடங்கு 21 வரை நீடிப்பு


### தொற்றாளர் எண்ணிக்கை படிப்படியாக வீழ்ச்சி

நாடு முழுவதும் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்தார்.

நேற்று (10) முற்பகல் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கொவிட்-19 ஜனாதிபதி செயலணி கூட்டத்தை தொடர்ந்து குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

02




### பொதுமுடக்கத்தால் தொற்றாளர் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி

## மக்கள் ஒத்துழைத்தால் விரைவில் கட்டுப்படுத்தலாம்

### உணர்வுபூர்வமாக கூறுகிறார் பணிப்பாளர்



(நூருல் ஹுதா உமர், பாறூக் சிஹான், எம்.என்.எம். அப்ராஸ்)

கல்முனை பிராந்தியத்தில் இதுவரை 6,800 பேரளவில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 157 பேர் இறந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் 50க்கும் குறைவானவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஒரு உயிரிழப்பு சம்பவம் மட்டுமே பதிவாகியுள்ளது. இதன்மூலம், பிராந்தியத்தில் பாதுகாப்பான தெளிந்த நிலை உள்ளதை அவதானிக்க முடிகிறதென கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜி. சுகுணன் தெரிவித்தார்

இந்த நிலை, பொதுமுடக்கம் அமுலில் உள்ளதனால் கிடைத்த பெறுபேறாகவே நோக்க முடிகிறது. பொதுமுடக்கம் தளர்த்தப்பட்டு,

02

# டெல்டாவுக்கு அஞ்ச வேண்டாம்; தடுப்பூசி ஏற்றினால் போதும்

### மூன்றாம் அலையில் 772 பேர் பலி



(பாறூக் சிஹான்)

கொரோனா மூன்றாவது அலையில் மொத்தமாக 42,784 நோயாளர்களும் 772 மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

டெல்டா திரிபு என்பதை பற்றி பயப்பட வேண்டாம். ஏனெனில் 2 தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கு இதன் தாக்கம் குறைவாக உள்ளதை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது.

ஆகவே, தடுப்பூசிகளை நீங்கள்

08

## தனித்தனி அறிக்கைகளால் தீமை ஏற்பட வாய்ப்பில்லை



புவிநேசராசா கேதீஸ்

ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு தனித்தனியாக அறிக்கைகள் அனுப்பியதால் எவ்வித தீமையும் இடம்பெற வாய்ப்பில்லையென புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தருமலிங்கம் சித்தார்த்தன் கல்முனை நெற்றுக்கு தெரிவித்தார்.

02

## மாற்று சமூகத்தை திருப்திப்படுத்த தமிழர்களை நோகடிக்க முடியாது

### தமிழர் தரப்பை சாடுகிறார் பிரசன்னா



(கு. ரஜனி )

வடக்கில் இடம்பெற்ற இனச்சுத்திகரிப்பு பற்றி நீலிக்கண்ணீர் வடிக்கும் எம்மவர்கள் கிழக்கில் மாற்றுச் சமூகத்தினால் இடம்பெற்ற இனஅழிப்பு தொடர்பில் ஏன் கருத்திட மறுக்கின்றார்கள்.

இனச் சுத்திகரிப்பு பற்றிப் பேசுவோர் கிழக்கில் இடம்பெற்ற

08

### அட்டாளைசேனை கோணாவத்தை ஆற்றில்

## மீன்கள் உயிரிழப்பு



(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள கோணாவத்தை ஆற்றில் உள்ள மீன்கள் கடந்த இரண்டு தினங்களாக திடீரென இறந்து மிதந்து வருவதால் தாம் மிகுந்த அச்சம் கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

02

## போலியான கருத்துக்களை நம்பி ஏமாற வேண்டாம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினால் ஆட்சியை கைப்பற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட சதித் திட்டமாகும் என்று சிலர் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான போலியான கருத்துக்களை நம்பி ஏமாற வேண்டாமென்று பொதுமக்களிடம் கேட்டுக் கொள்வதாக பாதுகாப்பு செயலாளர்,ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

தெரிந்து வைத்துள்ள தகவல்களை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு வழங்குவதன் மூலம் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் பாதுகாப்பு செயலாளர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்

02






## அம்பாறை பிள்ளையார் தீர்த்தோற்சவம்!

வி.சுகிர்தகுமார்

கிழக்கு மாகாணம்; அம்பாறை மாவட்டத்தில் அம்பாறையின் மத்திய பகுதியில் அமைந்துள்ள அம்பாறை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம்; நேற்று (10) சுகாதார நடைமுறைகளுடன் மக்கள் பங்கேற்பின்றி நடைபெற்றது.



# ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி பங்கேற்பு

## உலக தலைவர்களையும் சந்திக்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

நியூயோர்க்கில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் முதல் சந்தர்ப்பமும் நாடு கடந்து, சர்வதேச கூட்டத்தொடரொன்றில் பங்கேற்கும் முதல் சந்தர்ப்பமும் இதுவாகும்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி பொருளாதாரம், கல்வி, விவசாயம் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பில், பல நாடுகளின் அரச தலைவர்களுடன், இரு தரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொழம்பகே, ஆகியோரும், ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் கலந்துகொள்ள உள்ளனர்.

தன்னுடைய தனிப்பட்ட கொள்கை மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, குறைந்தளவு தொகையினருடன் இந்த விஜயத்தை மேற்கொள்ள, ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அதன்படி, அண்மைக்கால வரலாற்றில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரொன்றில், உள்நாட்டில் இருந்து குறைந்தளவு தொகையினர் கலந்துகொள்வது இதுவென்பதுடன், அயோமா ராஜபக்ஷ அம்மையார் தனது சொந்தச் செலவில் இந்த விஜயத்தில் கலந்துகொள்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் இருந்து மாலைதீவுக்கு மணல் ஏற்றுமதி...

மாலைதீவில், தீவொன்றை அமைப்பதற்காக, கிழக்கு மாகாணத்தில் இருந்து மணல் அகழப்பட்டு, லொரிகளில் எடுத்துச் செல்லபடுவதாகவும், அதற்கு, சிறிலங்கா சுதந்திர கட்சி அமைச்சர் ஒருவரும், கிழக்கு மாகாண ஆளுநரும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், மாலைதீவில் உள்ள தீவை நிரப்புவதற்கு இலங்கையில் இருந்து மணல் அனுப்பப்பட்டுள்ளமை நிரூபிக்கப்படுமாக இருந்தால், அமைச்சுப் பதவியில் இருந்து மாத்திரம் அல்ல, பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் தான் பதவி விலகுவதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர ஊடகங்கள் மூலமாக தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் நேற்று வெள்ளிக்கிழமை (10) பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பாக சுயாதீன விசாரணையை மேற்கொள்ளுமாறு, கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எல்.கே.டபிள்யூ.கே. சில்வாவிற்கு பணிப்புரை விடுத்துள்ளதுடன், இந்த விசாரணைகளை மிக விரைவாக மேற்கொண்டு, அதுதொடர்பான அறிக்கையை ஜனாதிபதிக்குகையளிக்குமாறு பணிப்புரைவிடுத்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைக்கான குழு நியமிக்கப்பட்டு, விசாணை மேற்கொள்ள கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுத்துவருகின்றார்.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரையான கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள பகுதிகளில், இந்த மணல் அகழ்வு இடம்பெற்று வருவதுடன், நாள் ஒன்றிற்கு 400 லோட் மணல் அகழ்ந்து 9 வீதிகள் ஊடாக வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த மணல் அகழ்வை வாழ்வாதார தொழிலாக பலர் மேற்கொண்டு வருவதுடன், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோர் மீது விசேட அதிரடிப் படையினரும் இராணுவம் மற்றும் பொலிசார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு உயிரிந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

## போலியான கருத்துக்களை...

சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே ஏதேனும் தகவல்கள் தெரிந்திருப்பின் அது தொடர்பில் ஆங்காங்கு விமர்சித்துக் கொண்டிருக்காமல், ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருக்காமல் குற்ற புலனாய்வு திணைக்களத்திடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். காரணம் குற்ற புலனாய்வு திணைக்களமே இது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு உதவுவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுமாறு சகலரிடமும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## இன்னுமா சொரணை இல்லை?

மக்கள் அங்கீகாரம் பெற்ற தலைவர்கள். உள்ளூரில் பிரிந்திருந்தாலும், ஒரே குரலில் நிற்கிறோம் என்பதை சர்வதேசத்துக்கு இந்தக் கட்சிகள் உரக்கச் சொல்லி இருக்கின்றன.

தமிழரசுக்கட்சியின் இந்த தமிழரை மறந்த செயற்பாட்டால், ஓரணியில் நின்று சர்வதேசத்தை அணுகும் முயற்சி, சுக்குநூறாகி இருக்கிறது. ஒரு சிறிய இனக்குழுவின் பிரச்சனையை சொல்ல, 4 அறிக்கைகள் அனுப்பப்படுகிறதென்றால், சர்வதேசம் எங்களை காறி உமிழாதா?

உள்ளூரில் இந்த கட்சிகள் தமிழர்களை வைத்து தனித்தனி அரசியல் நடத்தினாலும், சர்வதேசத்தை கையாள தனித்தனியான வெளிவிவகார கட்டமைப்பு தமிழ் கட்சிகளிடம் கிடையவே கிடையாது. அதே நேரம், தனித்தனியாக விவகாரத்தை கையாளும் அளவுக்கு நாம் பெரிய இனக் குழுமமும் அல்ல. இந்த நிலையில், நான்கு அறிக்கைகளை அனுப்புவது என்பது இனப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை சர்வதேச அரங்கில் மழுங்கடிக்கும் செயல் என்பதை தமிழரசுக் கட்சி புரிந்திருந்தால், இந்தக் கேவலமான நிலைமை ஏற்பட்டிருக்காது.

10 ஆசனங்களை வைத்துக்கொண்டு தமிழரசுக்கட்சி தன் வழியில் நடப்பது தமிழரின் நிலையை மறந்து செயல்பாடாகவே நோக்க வேண்டியிருக்கிறது. தமிழ் கூட்டமைப்பு என்பது மூன்று கட்சிகளுக்குள் மட்டுப் படுத்தப்பட்டு விட்டது. கூட்டமைப்பிலிருந்து வெளியேறினால் மக்கள் ஆதரவு கிடைக்காது என்பது தமிழரசுக் கட்சியின் நினைப்பாக இருக்கலாம். ஆனால், கடந்த தேர்தல் முடிவுகள் இதனை நிரூபித்திருக்கின்றன. கூட்டமைப்பிலிருந்து விலகி சென்ற, சீ. வீ விக்னேஸ்வரனும் அரசாங்க கட்சியில் போட்டியிட்ட வியாழேந்திரனும் வெற்றி பெற்றிருப்பது இதற்குச் சான்றாக அமைந்தது மட்டுமல்ல, அந்த சிந்தனையை தவிடு பொடியாக்கி இருக்கிறது.

எனவே, கட்சி சார் கௌரவப் பிரச்சனையை ஓரத்தில் வைத்துவிட்டு, தமிழர் என்ற போர்வையில் ஒன்றுபட்டால், எதிர்காலம் ஆரோக்கியம் பெறும்.

## பொதுமுடக்கத்தால் தொற்றாளர் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி...

மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பினால், அதனால் உண்டாகும் பாதிப்பின் எதிரொலியை காணலாம்.

கல்முனை பிராந்தியத்தில் 500 கொரோனா தொற்றாளர்கள் அளவில் இப்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். அதில், 100 பேர் வைத்தியசாலையிலும், இன்னும் 100 பேர் இடைத்தங்கல் நிலையங்களிலும் மேலும் 300 பேரளவில் வீடுகளிலும் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கல்முனை பிராந்தியத்தில் தடுப்பூசி ஏற்ற தகுதியானோரில் 95 சதவீதமானோர் முதலாவது தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளதுடன் ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் நடமாடும் முறையில் இடம்பெற்று வருகிறது. இரண்டாம் தடுப்பூசியை இதுவரை 75 சதவீதமானோர் பெற்றுக்கொண்டுள்ளதுடன், ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் மும்முரமாக நடைபெற்று வருகிறதென்றும் அவர் கூறினார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளை சரியான பொறிமுறையொன்றை நிறுவி மீளத்திறக்க அரச உயர்மட்டத்தில் பல்வேறு கலந்தாலோசனைகள் இடம்பெற்று வருகிறன. நாட்டின் பொருளாதாரம், கல்வி, வர்த்தகம், தொழிற்சாலைகள் என்பன விரைவாக சாதாரண நிலைக்கு திரும்ப தங்களின் முழு அர்ப்பணிப்பை சுகாதாரத்துறை வழங்கி வருகிறது.

ஏனைய துறையினரும் பொதுமக்களும் தமது முழு ஒத்துழைப்பை வழங்கினால், நாம் கொரோனா தொற்றை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது ;

அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்ட பெலியகொடகொத்தணி, கிழக்கில் அக்கரைப்பற்று என கொரோனா தொற்றாளர்கள் அதிகமாக மீன் சந்தைகளிலேயே அடையாளம் காணப்பட்டனர்.

அந்த வரிசையில், மாளிகைக்காடு பிரதேச மீன் சந்தையும் இணைந்து கொள்ள கூடாது என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். மாதக் கணக்கில் பாவித்த முகக்கவசங்களுடன் சிலரும், முகக் கவசங்களை ஒழுங்கான முறையில் அணியாமல் சிலரும் சந்தைகளில் உலாவித் திரிவது பாரிய ஆபத்தை பொது மக்களுக்கு உண்டாக்கும் என பணிப்பாளர் டொக்டர் ஜி. சுகுணன் கவலை தெரிவித்தார்.

இதுவரை கல்முனை பிராந்தியத்தில் 6,800 பேரளவில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 157 பேர் இறந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலங்களில் 50க்கும் குறைவானவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஒரு உயிரிழப்பு சம்பவம் மட்டுமே பதிவாகியுள்ளது. இதன்மூலம், பிராந்தியத்தில் பாதுகாப்பான தெளிந்த நிலை உள்ளதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலை, பொதுமுடக்கம் அமுலில் உள்ளதனால் கிடைத்த பெறுபேறாகவே நோக்க முடிகிறது. பொதுமுடக்கம் தளர்த்தப்பட்டு, மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பினால், அதனால் உண்டாகும் பாதிப்பின் எதிரொலியை காணலாம்.

கல்முனை பிராந்தியத்தில் 500 கொரோனா தொற்றாளர்கள் அளவில் இப்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். அதில்,100 பேர் வைத்தியசாலையிலும், இன்னும் 100 பேர் இடைத்தங்கல் நிலையங்களிலும் மேலும் 300 பேரளவில் வீடுகளிலும் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கல்முனை பிராந்தியத்தில் தடுப்பூசி ஏற்ற தகுதியானோரில் 95 சதவீதமானோர் முதலாவது தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளதுடன் ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் நடமாடும் முறையில் இடம்பெற்று வருகிறது. இரண்டாம் தடுப்பூசியை இதுவரை 75 சதவீதமானோர் பெற்றுக்கொண்டுள்ளதுடன், ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கடந்த ஒன்றரை வருடங்களாக மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளை சரியான பொறிமுறையொன்றை நிறுவி மீளத்திறக்க அரச உயர்மட்டத்தில் பல்வேறு கலந்தாலோசனைகள் இடம்பெற்று வருகிறது. நாட்டின் பொருளாதாரம், கல்வி, வர்த்தகம், தொழிற்சாலைகள் என்பன விரைவாக சாதாரண நிலைக்கு திரும்ப தங்களின் முழு அர்ப்பணிப்பை சுகாதாரத் துறை வழங்கி வருகிறது.

ஏனைய துறையினரும் பொதுமக்களும் தமது முழு ஒத்துழைப்பை வழங்கினால், நாம் கொரோனா தொற்றை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்றார்.

## அட்டாளைசேனை கோணாவத்தை...

நூற்றுக்கணக்கானோரின் வாழ்வாதார தளமாகவும் அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆறு இருந்து வருகின்றது.

இவ்வாற்றில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் சிறியளவிலான சிறு தொகை மீன்கள் இறந்து மிதந்து காணப்பட்டதுடன், படிப்படியாக மீன்கள் இறப்பு வீதம் அதிகரித்து தற்போது பல்லாயிரக் கணக்கான மீனினங்கள் இறந்து கரையொதுங்கி காணப்படுகின்றன. இதனால் இப்பிரதேசத்தில் துர்நாற்றம் வீசி வருவதோடு, இப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்விலும் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் நிலவி வரும் வரட்சியுடனான காலை நிலை காரணமாக இவ்வாற்றுப் பகுதியில் உவர் தன்மை ஏற்பட்டமை மீனினங்கள் இறப்பதற்கு காரணமாக இருக்கக் கூடும் எனவும், ஆற்று நீரில் ஏதேனும் இரசாயனப் பதார்த்தங்கள் சேர்ந்தாலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழக்காரணமாவும் அமையலாம் என பிரதேச மக்களும் துறைசார்ந்தோரும் தெரிவிக்கின்றனர்.

இது போன்று இதற்கு முன்னர் இவ்வாறாக பெருந் தொகையான மீனினங்கள் இவ்வாற்றில் இறந்து கரையொதுங்கவில்லை எனவும் இவ்வாறு பல்வேறு இன மீன்கள் இறந்து கரையொதுங்குவதானது இதுவே முதற்தடவை எனவும் இவ்விடயம் தமக்கு மிகுந்த அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும் கரையோர பிரதேச மக்களும் மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

## ஊரடங்கு 21 வரை...

தற்போது நாட்டில் பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது ட்விற்றர் கணக்கில் பதிவு இட்டுள்ள அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வித பயமும் இன்றி நாட்டை மிக விரைவாக திறக்க முடியுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு முழுவதும் கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி இரவு 10.00 மணி முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனித்தனி அறிக்கைகளால்...

‘ஒரு அறிக்கையை எல்லோரும் ஒப்பமிட்டு அனுப்புவதிலும் பார்க்க, தனித்தனியாக அனுப்புவது ஐ.நா மனித உரிமை பேரவையில் கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தும்’ என்றார் அவர்.

ஐ. நா. மனித உரிமை பேரவைக்கு ஒருமித்த குரலில் ஓரணியில் நின்று ஓர் அறிக்கையை அனுப்புவதற்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்ட நிலையில், தமிழ்க் கூட்டமைப்பு, ரெலோ அனுசரணையில் தயாரிக்கப்பட்ட அறிக்கை, சிறிதரன் எம்.பி தலைமையிலான அறிக்கை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் இன்னொரு அறிக்கையுமாக மொத்தம் நான்கு அறிக்கைகள் ஐ.நாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தமிழர்களின் ஒற்றுமையை இந்த அறிக்கைகள் சர்வதேச அரங்கில் கேள்விக்குட்படுத்தாதா? என்று சித்தார்த்தன் எம்பியிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

‘அனுப்பிய ஒவ்வொரு அறிக்கையும் ஒரே குறிக்கோளுடனும் ஒரே கருத்தையே கூறியிருக்கின்றன.

ஆகவே, தமிழர்களின் தற்போதைய பிரச்சனைகள் தொடர்பாக ஐ.நா தெளிவாக புரிந்து கொள்ளும் என்பதே எனது நம்பிக்கை. நான்கு அறிக்கைகள் என்றாலும் அனைத்துமே தமிழர் நலன்பற்றியே பேசி இருக்கிறது’ என்று தெரிவித்தார்.

கல்முனை NET kalmunainet.com e paper
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.
பகைவர்கட்கு துணையானவரைப் பிரித்தலும், தம்மிடம் உள்ளவரைக் காத்தலும், பிரிந்து கொண்டவரை மீண்டும் சேர்த்துக்கொள்ளலும் வல்லவன் அமைச்சன்.

# இன்னுமா சொரணை இல்லை?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் தொடங்கினால் இலங்கை அரசியலில் நடக்கும் அமளிகள் சொல்லி மாளாது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் மீளாய்வு கூட்டத் தொடர் இம் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை அரசாங்கமும் தமிழ் கட்சிகளும் அறிக்கைகளை சமர்ப்பிக்க காட்டுகின்ற ஆரவாரம், கொரோனவையும் மிஞ்சிய பதற்றமாக இருக்கிறது.

அடுத்த வாரம் ஆரம்பமாக உள்ள அமர்வின் முதல் நாளே, ஐநா மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் வாய்மூல விளக்கங்களை அளிப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது. அமர்வில் இலங்கை தொடர்பில் கடந்த அமர்வின் போது நிறைவேற்றப்பட்ட 46/1 என்ற தீர்மானமும் அதன் பரிந்துரைகளும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்வதே இந்த அமர்வின் குறிக்கோளாகும்.

ஆரம்பமாகவுள்ள அமர்வுக்கு முன்னதாக, இருதரப்பும் தங்களுடைய நியாயங்களை வழங்குவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய, இலங்கை அரசு தனது நிலையை விளக்கி 16 பக்கங்களில் அறிக்கையை அனுப்பி வைத்துள்ள நிலையில், தமிழ் கட்சிகள் தனித்தனியாக நான்கு ஆவணங்களை அறிக்கைகளாக அனுப்பி வைத்துள்ளதாக தெரிகிறது.

தமிழர் தரப்பில், ஓரணியில் ஒருமித்த குரலில் சகல கட்சிகளும் சேர்ந்து ஒரு அறிக்கையை அனுப்புவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையிலும், அந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்திருக்கிறது.

இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பு தனியான ஒரு அறிக்கையை அனுப்பி உள்ளது. மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில், இரா சம்பந்தன் மட்டும் கையொப்பமிட்டு அறிக்கையை அனுப்பி வைத்திருக்கிறார் என்பது ஊர்ஜிதமாகிறது.

இதேவேளை, ரெலோவின் முன்னெடுப்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையில், கூட்டமைப்பில் உள்ள இரண்டு கட்சிகள் கையொப்பம் இட்டுள்ளன. இதன் பிரதிகள் தமிழரசுக் கட்சிக்கு அனுப்பி இருந்த போதிலும், அவர்கள் இதனை கணக்கில் எடுக்கவுமில்லை; தங்கள் நிலைப்பாட்டை சொல்லவுமில்லை.

தமிழரசுக்கட்சி ஏன் இப்படி நாகரிகம் இல்லாமல் நடந்து கொள்கின்றது என்பது அரசியல் ஆய்வாளர்களின் கேள்வியாகும். தமிழரசுக்கட்சி மிதவாத கட்சி என்ற தோரணையில் தனது ஆதிக்க சிந்தனையை நிலைநிறுத்த முயற்சிக்கிறது. என்றாலும், அதனுடைய நிலைப்பாடு சர்வதேசத்தில், தமிழரை தலை குனிய வைத்திருக்கிறது.

டெலோ கட்சியினால் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் திருப்தி இல்லை என்றால், திருத்தங்களை முன்வைக்கும் உரிமை தமிழரசுக் கட்சிக்கு இருக்கிறது. மூத்த அரசியல் தலைவர்களான சம்பந்தனும் மாவை சேனாதிராஜாவும் தமிழர் தலைவர்கள் என்றால் பக்குவத்துடன் நடந்து காட்ட வேண்டும்.

ஆனாலும், இவர்கள் நடந்து இருக்கின்ற விதம், தங்கள் கட்சியின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கான நடவடிக்கையாகவே பார்க்க முடிகின்றது. ஏனைய கட்சிகளையும் அரவணைத்துச் செல்லும் தலைமைத்துவ பக்குவத்திலிருந்து தமிழரசுக் கட்சி விலகிச் செல்கிறது என்பது இதன்மூலம், தெட்டத் தெளிவாகின்றது.

டெலோ தயாரித்த பொதுவான அறிக்கையில் 5 கட்சிகள் ஒப்பமிட்டு இருக்கின்றன. ஈ. பி. ஆர். எல். எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், டெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளட் தலைவர் சித்தார்த்தன், திரு. சீ. வீ.விக்னேஸ்வரன், சட்டத்தரணி சிறிகாந்தா ஆகியோர்

மிகுதி 2ஆம் பக்கம்

## தமிழர் பகுதிக்குள் மதரசா அமைக்கும் முயற்சி;

# மக்களைத் திரட்டி தொடர் போராட்டம் நடத்துவேன்



அலுவலக செய்தியாளர்

கல்முனையில் கோயில் வீதியில் அமைந்துள்ள கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகில் மதரஸா ஒன்றை சட்டவிரோதமான முறையில் கட்டுவதற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனை உடனடியாக நிறுத்தாவிட்டால், மக்களை திரட்டி போராட்டம் நடத்தப்போவதாக கல்முனை மாநகர சபை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

> "தமிழர் உணர்வுகளை உரசிப் பார்க்காதீர்கள்"

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிக்குள் இந்த மதரஸாவை கட்ட முற்படுவது, இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்தும் திட்டமிட்ட செயல் என சுட்டிக்காட்டும் அவர், அதிகாரிகள் மட்டத்தில் இதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த கோயில் வீதி சந்தியில், ஏற்கனவே தமிழரிடம் இருந்து அபகரிக்கப்பட்ட காணியில், ஒரு பள்ளிவாசல் அமைக்கப்பட்டுள்ளது. இதனை தமிழ் மக்கள் யாரும் எதிர்க்கவில்லை. கடற்கரைப் பள்ளிவாசல் இதன் அருகில்தான் இருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் சுத்தி சுத்தி பள்ளிவாசல்கள் இருக்கும்பொழுது,

தமிழர் பகுதிக்குள் இன்னும் ஒரு காணியை அபகரித்து, மதரஸா என்ற பெயரில் பள்ளிவாசல்கள் கட்டுவதற்கு முயற்சி நடக்கிறது.

விரும்பத்தகாத இத்தகைய செயல்பாடுகள், தமிழர் பிரதேசங்களை கபளீகரம் செய்யும் முஸ்லிம் அடிப்படைவாதிகளின் நயவஞ்சக செயலாகவே இருக்கிறது என்று ராஜன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் சமூகம் ஒரு விடயத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிக்குள், தமிழர்கள் கோயில் கட்டினால் அல்லது விகாரை ஒன்று கட்டப்படுமானால், முஸ்லிம்களின் மனோநிலையும் உணர்வும் எப்படி இருக்கும் என்பதை சம்பந்தப்பட்ட அடிப்படைவாதிகளும் முஸ்லிம் சமூகமும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எங்கெல்லாம் தமிழர் பிரதேசங்களில் காணிகள் நயவஞ்சகத்தனமாக வாங்கபடுகின்றதோ, அங்கெல்லாம் பள்ளிவாசல்களையும் மதரஸாக்களையும் அமைத்து, அந்தப் பகுதிகளில் தங்களினம் சார்ந்த சூழலை ஏற்படுத்திவிட்டு, மேலும் முன்னேறி தமிழர் பிரதேசங்களில் காணிகளை கொள்வனவு செய்து, தங்கள் எல்லைகளை விஸ்தரித்துக் செல்வதுதான் இவர்களது கபடத்தனம். காலங்காலமாக முஸ்லிம் அடிப்படைவாதிகள் இதனையே செய்து வருகிறார்கள்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்...

**நியூசிலாந்து** நாட்டில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 6 பேர் கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்தனர். இந்த தாக்குதல் நடத்திய பயங்கரவாதி அந்த இடத்திலேயே பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



# உலகுக்கு சரியான பாடம் கற்பித்த நியூசிலாந்தின் நல்லாட்சி

அரசியல் செய்தியாளர்

இவை எல்லாம் பழைய கதையாக இருந்தாலும், பொறுப்புள்ள அரசாங்கம் ஒன்றும் அதன் தலைமையும் எப்படி நடந்து இருக்கிறது என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது நியூசிலாந்து.

தாக்குதல் நடத்தியவர் ஒரு இலங்கை பிரஜை. காத்தான்குடியை பிறப்பிடமாகக் கொண்டவரென்ற விபரமெல்லாம் பின்னர் தான் நமக்கு தெரியவந்தது.

கத்திக்குத்து தாக்குதல் நடத்தியவர் 'முஹம்மட் ஆதீல் சம்சுதீன்' என்பவர் என அடையாளம் காணப்பட்ட போது, அவர் பற்றிய எந்த விடயங்களையும் அரசு வெளிப்படுத்தவில்லை. இலங்கையைச் சேர்ந்த ஒருவர் என்று மாத்திரமே அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தாங்குதல் நடந்ததன் பின்பு, இது தொடர்பாக அந்த நாட்டின் பிரதமர் ஜெசி ந்தா ஆர்டன் விசேட அறிவிப்பொன்றை விடுத்தார்.

**'இது ஒரு தனிப்பட்ட நபரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல். அவரே இந்தக் கொடுமைக்கும் கொடூரத்துக்கும் பொறுப்பாளி. அவர் கொண்டுள்ள மத நம்பிக்கை அல்ல இதற்கு காரணம்'** என்று கூறிய பிரதமர், **'இந்தத் தனி நபருக்கு அப்பால், எவரையும் இது விடயத்தில் சாடுவது தவறாகும்'** என அழுத்தமாகச் சொன்னார்.



இப்படியான ஓர் அறிவிப்பை கொடுக்கும் துணிவும் நேர்மையும் எத்தனை தலைவர்களுக்கு வரும். பயங்கரவாத தாக்குதல்கள் நடந்தாலே ஆத்திரம் மிகுதியாக பேசும் நம் நாட்டு அரசியல் தலைமைகளுக்கு, மிகவும் படிப்பினை கொடுத்திருக்கும் ஒரு அறிவிப்பாகவே இதனை பார்க்க முடிகின்றது.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்...

# காணி விற்பதை தடுக்க பொதுக்கட்டமைப்பு..!

## யோசனை கூறுகிறார் ஹென்றி மகேந்திரன்



நேர்காணல் – பு.கேதீஸ்

**கல்முனை மாநகரசபையின் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்கினீர்கள். பொது அமைப்புக்கள் பல அதனை எதிர்த்திருந்தன. அது தொடர்பாக உங்கள் கருத்து?**

> **“தமிழரர் பிரதேசத்துக்குள் மதரஷா கட்ட முற்படுவது இன முறுகலுக்கு வித்திடும்”**

கல்முனை மாநகரசபையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைப்பது என்ற ஏற்பாடுகள் ஆரம்பத்தில் நடைபெற்ற போது எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடந்தன. முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் மேயராக வருவதற்கு த.தே.கூட்டமைப்பு உறுப்பினர்கள் அதரவு வழங்க வேண்டும் எனவும் பிரதி மேயர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க தாங்கள் ஆதரவு தருவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கேட்டுக்கொண்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பிரதி மேயர் என்பது முக்கிய குறிக்கோள் இல்லை . கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான அதிகாரங்கள் கிடைக்க முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்ககூடாது அத்துடன் புதிய நகர அபிவிருத்தி திட்டம் தமிழருக்கு பாதகமாக அமையக் கூடாது தமிழரின் வயல்காணிகள் அபகரிக்ககூடாது என்ற கோரிக்கைகளுடன் கல்முனையில் வளப்பங்கீடு பக்கச்சார்பின்றி பகிரப்பட வேண்டும் இந்த உடன்படிக்கை எழுத்து மூலம் தரும் பட்சத்தில் ஆதரவு வழங்குவோம் என எமது கருத்தை முன்வைத்தோம். இந்த கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளாததால் நாங்கள் எதிர்த்திருந்தோம். காலப்போக்கில் அவர்களின் செயற்பாடுகளில் 100 வீதம் திருப்தி இல்லாவிட்டாலும் பொதுவிடயங்களில் ஓரளவு திருப்தி இருந்தது. தொடர்ச்சியாக 2 வரவு செலவு திட்டங்களையும் எதிர்த்தே வந்தோம். அடுத்த வரவு செலவு திட்டத்திற்கு எம்முடன் ஆதரவு கோரினார்கள். எமது கட்சி தலைவருடன் வினவியிருந்தோம். முஸ்லிம் காங்கிரஸ் தலைமை எமது தலைமையுடன் பேசியிருந்தார்கள் ஏற்கனவே முன்வைத்த கோரிக்கையை முன்வைத்தோம். அவர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்வுக்கு தாங்கள் இனி எதிர்ப்பதில்லை எனவும் அதற்கான தீர்வு முஸ்லிம்களுக்கு பாதகமின்றி அமைய வேண்டும் என்ற கொள்கையுடன் வந்தார்கள். அத்துடன நகர அபிவிருத்தி திட்டத்தில் தமிழர்களின் காணிகள் தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக திணிக்கப்படபடமாட்டாது வளப்பங்கீடு விகிதாசார அடிப்படையில் பகிரப்படும் எனவும் கொள்கையளவில் உடன்பட்டார்கள். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவதத்தின் பொது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றவூப் ஹக்கீம் உரையாற்றுகையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு தாங்கள் எதிர்ப்பு இல்லை முஸ்லிம்களுக்கு பாதிப்பில்லாத தீர்வுக்கு தாங்கள் ஆதரவு என உரையாற்றியிருந்தார். இது தொடர்பாக நானும் சபையில் பேசியிருந்தேன் இந்த கருத்தை வலியுறுத்தி உறுப்பினர் றொசான் அக்தாரும் பேசியிருந்தார். எமது கட்சியின் தலைமையுடனான கலந்துரையாடலின் பின்பு வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தோம். கல்முனை மாநகர சபையில் வேறு வேறு கட்சிகளைச் சேர்ந்த 13 தமிழ் உறுப்பினர்கள் உள்ளார்கள் 29 முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளார்கள். இதில் தமிழர் ஒருவர் மேயராக வருவதற்கு வாய்ப்பு இல்லை . இந்த நிலையில் மேயராக யாருக்கு நாம் ஓப்பிட்டவில் ஆதரவளிக்கலாம் என்றும் யோசித்தோம். கல்முனை வடக்கு பிரதேச செயலகமே வேண்டாம் என்று கூறிக்கொண்டிருக்கம் அதாவுல்லாவின் பின்னால் ஆதரவு வழங்கிக்கொண்டிருக்கும் சாய்ந்தமருது சுயேச்சைக்கு நாம் ஆதரவு வழங்குவதா அல்லது முஸ்லிம் காங்கிரசுக்கு ஆதரவு வழங்கவதா என்ற நிலையில் இந்த முடிவை எடுத்தோம். வரவு செலவு திட்டத்துக்கு எதிர்க்க வேண்டும் என்று சொல்பவர்கள் அதற்கான மாற்று வழியையும் கூற வேண்டும்.

கொள்கை மாறாமல் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப எமது மக்களுக்கு எது ஒப்பீட்டளவில் பாதிப்பில்லை என்பதை வைத்து முடிவெடுப்பதே அரசியல் சாணக்கியம்.

**வளப்பங்கீடுகள் மாநகரசபை சேவைகள் பக்கச்சார்பின்றி இடம்பெறுகின்றதா?**

வரவு செலவு திட்டத்தின் பின்னர் மாநகரசபையில் வருமானம் இல்லை காரணம் கொவிட் நிலைமை. மாநகரசபைக்கு வருமானம் வரும் வழிகள் வர்த்தக வரி குத்தகை வரி சோலைவரி முத்திரை வரி நீதி மன்ற தண்டப்பணம். ஆனால் கொவிட் நிலைமைகளால் வருமானம் முடங்கியுள்ளது. இந்த நிலையில் இருக்கும் வருமானங்களை கொண்டு அத்தியாவசிய சேவைகளை மாநகர சபை செய்கின்றது. உதாரணமாக திண்ம கழிவகற்றல் தெருவிளக்கு பராமரிப்பு போன்ற சேவைகளே இடம்பெறுகின்றன. அது பக்கச்சார்பின்றி இடம்பெறுகின்றன. வளப்பங்கீடு செய்யும் நிலையில் வருமானம் இல்லாத நிலைதான் தற்போது காணப்படுகின்றது.

> **”முஸ்லிம்களை பாதிக்காது கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவதை நாங்கள் எதிர்க்கமாட்டோம் என முஸ்லிம் காங்கிரஸ் உறுதியளித்ததனாலேயே வரவு – செலவு திட்டத்தை ஆதரித்தோம்”**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழரசுக்கட்சியின் ஆதிக்கம் உள்ளது என்ற கருத்து தங்கள் கட்சி சார்ந்தோரால் முன்வைக்கப்படுகின்றது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆண்டுவரை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நேரடி வழிநடத்தலில் இருந்தது என்பது வெளிப்படையான உண்மை. 2009 ஆம் ஆண்டின் பின்பு சிறிய கட்சி பெரிய கட்சி என்ற அடிப்படையிலும் தமிழரசுக்க்சியின் சின்னம் பதிக்கப்படுவதும் த.தே.கூட்டமைப்புக்குள் தமிழரசுக்கட்சியின் ஆதிக்க போக்கு இருப்பதும் வெளிப்படையான உண்மை.

# மனல் உரிமம் வழங்க புதிய வழிமுறை

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் சக அரசாங்க அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போது சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர கடத்தல்காரர்களிடமிருந்து மணல் கடத்தலை கட்டுப்படுத்த மற்றும் கூட்டுறவு சங்கங்களை நிறுவுவதற்கு ஒரு நிலையான திட்டம் தயாரிக்கப்படும் என்று கூறினார்.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நன்மைகளை வழங்குதல். கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான முடிவுகளை எடுக்க ஆளுநரின் தலைமையில் ZOOM தொழில் நுட்பம் மூலம் குறித்த கூட்டம் நடைபெற்றது.

தற்போது நாட்டிற்கு தேவையான மணலின் அளவு பொலன்னறுவை மாவட்டத்துக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து பெறப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். பல முக்கிய சுற்றுச்சூழல்பிரச்சினைகள் எழுந்திருப்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

# ஏறாவூர் பகுதியில் மூவர் போதைப்பொருளுடன் கைது!

**(வ. சக்திவேல்)**



16000 மில்லி கிறாம் கேரளா கஞ்சா ,400 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது மோட்டார் சைக்கிளும் மீட்பு

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி 16000 மில்லி கிராம் கேரளா கஞ்சா மற்றும் 400 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளைக் கடத்திய மூவர் வியாழக்கிழமை (09) மாலை ஏறாவூர் பகுதியில் கைது செய்துள்ளதுடன் கடத்தலுக்குப் பயன் படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்தார். கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது 16,000 மில்லி கிராம் கேரளா கஞ்சா,400 மில்லி கிராம் ஐஸ் ஆகியவற்றுடன் மூவர் கைது செய்யப் பட்டனர்.

# கின்னியாவில் 120 சீனி மூடைகளுக்கு சீல் வைப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை-கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கச்ச கொடித்தீவு பிரதேசத்தில் சூட்சமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீனி 50 கிலோ கிராம் நிறையுடைய 120 மூடைகள் நேற்று முன்தினம் (09) கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவற்றுக்கு முத்திரை இடப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரல தெரிவித்தார்.

இரகசியமாக கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பை அடுத்து குறித்த பிரதேசத்திற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டு குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பிறிதொரு பொருட்கள் அடங்கிய களஞ்சியசாலையில் குறித்த 120 சீனி மூடைகளும் பதுக்கி வைக்கப்பட்டு இருந்ததாகவும் உரியநபருக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின்படி உரிய அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். கடந்த சில தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சில பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்கப்பட்டு வருவதாக தமக்கு முறைப்பாடு பொதுமக்களால் செய்யப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான பிரதேசங்களை இனங்கண்டு சுற்றிவளைப்புகள் மேற்கொண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தாம் அறிவுறுத்தல் வழங்கியதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# களுவாஞ்சிகுடியில் கோகுலரஞ்சனால் வடிவமைக்கப்பட்ட உழவு இயந்திரம்.

**திய கண்டுபிடிப்புக்கு அரசிடம் அங்கீகாரம் கோருகிறார்**



**-சக்திவேல்-**

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி கோகுலரஞ்சன். என்பவர் உழவு இயந்திரம் உன்றை கண்டு பிடித்துள்ளார். சிறிய வயதிலிருந்தே தொழில் நுட்பத்துறையில் ஆர்வமான இவர், தற்கால கொவிட் - 19 காலத்தில் கணிணி திருத்தும் வேலைகள் குறைவடைந்துள்ளதால் 45 நாட்களில் சுமார் 4 இலட்சம் ரூபா செலவில் கழிவுப் பொருட்களைக் கொண்டு புதிய ரக உழவு இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இவரது இந்த புதிய கண்டுபிடிப்பு மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயக் கிராமத்தில் பிறந்ததாலும், விவசாயத்தில் அதிக நாட்டமுள்ளதாலும், தாம் எவரிடமும் கையேந்தாமல் விவசாயிகளுக்கு புதிய உழவு இயந்திரம் ஒன்றைறக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டுதான் , இவ்வுழவு இயந்திரக்கைக் கண்டுபிடித்துள்ளதாகவும், இதற்கு அரச அங்கீகரம், மற்றும் பதிவுச் சான்றிழ் போன்றவற்றைப் பெற்றுத்தர அரசாங்கம் பெற்றுத் தர வேண்டும். என கோருகின்றார்.

# வரலாற்று கண்டிச் சின்னங்களை பாதுகாக்க அமெரிக்கா உதவி

**(ஏல்.எம்.சலீம்)**

கண்டியிலுள்ள 17 ஆம் நூற்றாண்டின் மன்னர் அரண்மனை மற்றும் தொல் பொருள் அருங்காட்சியகத்தை பேணிப் பாதுகாப்பதற்காக கலாசார பாதுகாப்புக்கான அமெரிக்க தூதுவர்கள் நிதியத்தின் **(U.S.Ambassadors Fund for Cultural Preservation AFCP)** ஊடாக கடனற்ற உதவித் தொகை ஒன்றை ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் வழங் கியுள்ளது.

இந்த திட்டத்திற்கான நிதியளிப்பின் மொத்த தொகையானது 52 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு அதிகமாகும். (265,000 அமெரிக்க டொலர்கள்) கலாசார பாதுகாப்புக்கான தூதுவர்கள் நிதியமானது 2001 ஆம் அண்டில் இருந்து இலங்கையில் 14 திட்டங்களுக்கு நிதியுதவி செய்துள்ளது. ராஜகல பௌத்த ,இந்து மற்றும் ஜேைய சேகரிப்புக்களின் பாதுகாப்பு மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையின் மறுசீரமைப்பு மற்றும் ஆதிவாசி தமிழ் மற்றும் பௌத் சமூகங்களின் சடங்கு முறை இசை மற்றும் நடன வடிவங்களின் பாதுகாப்பு என்பன இவற்றில் உள்ளடங்கும்.

# நகரங்களை அழகுபடுத்தும் செயற்திட்டம் கல்முனையில் ஆரம்பம்!





(செல்வராஜா டிருக்சன்)

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு எனும் அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை நகரமும் உள்வாங்கப்பட்டுள்ளது.

100 பெருநகரங்களை அபிவிருத்தி செய்யும் இத்திட்டத்தின் அடிப்படையில் நாட்டில் உள்ள 100 நகரங்களினை தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

கடலோர பாதுகாப்பு கழிவுப் பொருட்கள் அகற்றுகை, மற்றும் சமுதாய தூய்மை இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நெறிப்படுத்தலில் சுமார் 18.7 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கல்முனை நகரம் அழகுபடுத்தப்பட இருக்கின்றது.

இத் திட்டத்தினை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (10) கல்முனை மாநகர சபை முதல்வர் ஏ.எம் ரக்கீப் தலைமையில் கல்முனை பேருந்து தரப்பிடத்தில் தரிப்பிடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ். பி.எஸ் ஜெயதிஸ்ஸ,கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம் ரோஸன் அக்தார்,எம்.எஸ். எம் நிஸார்,ஏ.சி.ஏ சத்தார்,சந்திர சேகரம் ராஜன்,சிவலிங்கம், எம்எஸ். எம் நவாஸ்,செலஸ்ரினா ராகல் ,வி. நந்தினி புவனேஸ்வர விநாயகமூர்த்தி , நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள்,பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா,இணைப்பு செயலாளர் சப்ராஸ் நிலாம்,உட்பட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.




**கொரோனா அலையை கட்டுப்படுத்தும் நோக்கில் யுனிசெப் நிறுவனத்தினால் முன்களப் பணியாளர்களாக கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு தேவையான ஒரு தொகை பாதுகாப்பு உபகரணங்கள் நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.**

# பசியையும் பிணியையும் போக்குவதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை



## அக்கரைப்பற்று மாநகர சபை தேசிய காங்கிரஸ் உறுப்பினர் எஸ். எம்.சபீஸ்

**மக்களுக்கு உதவுவதற்கு பதவிகள் ஒரு பொருட்டல்ல் கட்சிக்கு விசுவாசமாகவே உழைக்கிறேன் இளவயதில் சமூகப் பணிகளில்( 2005) ஈடுபட்டு இன்று எல்லோரது நல்லபிப் பிராயங்களையும் வென்று நிற்பவர் எஸ்.எம் சபீஸ்.தேசிய காங்கிரஸில் ஆரம்பமான இவரது அரசியல் பயணம் இன்றுவரையும் அதே கட்சியில்தான் தொடர்கிறது. அரசியலின் ஆதியும் அந்தமும் தேசிய காங்கிரஸ்தான் என்கிறார் எஸ்.எம்.சபீஸ். பரிணாமம் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில், தற்போதைய நிலைமைகள் குறித்து மனம் திறந்தார் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும்,அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் தலைவரும் தேசிய காங்கிரஸ் உயர்பீட உறுப்பினருமான எஸ்,எம்,சபீஸ்.**

**அரசியலுக்கு வர முன்னரே மக்கள் பணியில் ஈடுபட்டவர் நீங்கள். எதையாவது இலக்கு வைத்தா இந்தப் பணியை ஆரம்பித்தீர்கள்?**

ஆண்டவன் நாடாமல் எதை எதிர்பார்த்தும் நடக்கப்போவதில்லை. எனது,இளமைக்காலம் பல வலிகள் நிறைந்தவையாக இருந்தன. இந்த வலிகளுக்கு விடை தேடிய எனது பயணம் பல படிப்பினைகளையும் தந்தன.ஏழைகளுக்கு உதவுதல், மாணவர்களின் கல்விக்கு கை கொடுத்தல் மற்றும் இல்லோதோரின் இலட்சியங்கள் நிறைவேறத் தோள் கொடுத்தல் போன்றவற்றுக்காக உழைத்து வருகிறேன். இதில்,எந்த எதிர்பார்ப்புக்களும் இல்லை.

**அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் சம்மேளனம் கலைக்கப்பட்டு,அனைத்து நிறுவனங்களின் சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது. இது,உங்களைக் குறிவைத்த செயற்பாடாகக் கருதலாமா?**

கலைக்கப்பட்டதாக எந்த அறிவிப்பும் வரவில்லை. கலைக்குமாறு தேசிய காங்கிரஸ் தலைவர் அறிவித்துவிட்டு, அனைத்து நிறுவனங்களின் சம்மேளனத்தை ஆரம்பித்துள்ளார்.என்னைக் குறிவைப்பதற்கு இதில் என்ன உள்ளது.இதன் தலைவராக நான் இயங்கிக் கொண்டிருக்கையில்,தலைமையை மற்றுமொரு பள்ளிவாசலுக்கு கையளிக்கும் சூழலில்தானே இந்த அமைப்பு கலைக்கப்பட்டது.தொடர்ந்து இது,இயங்குமா?இல்லையா?என்பது நாட்டின் முடக்க நிலை நீங்கியதும் தெரிய வரும். மக்களுக்கு எதையாவது செய்வதற்கு பதவிகள்தான் தேவையென்பதில் லையே! விசாலமான மனப்பாங்கும், ஏழைகளுக்கு உதவும் எண்ணமும் போதுமானதுதானே.

**உங்களது பதிலில் எதையோ மறைப்பது போலுள்ளது. அண்மையில் (03) அதாவுல்லா அரங்கத்தில் நடந்த கூட்டத்தில், தேசிய காங்கிரஸ் தலைமை மிகக் கடுமையாக உங்களை விமர்சிக்கவி ல்லையா?**

அந்தக் கூட்டத்தில், தலைவர் எவரை விமர்சித்தார்,எதற்காகச் சாடினார் என்பதையெல்லாம் கூட்டத்தில் கலந்து கொண்டோரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அதில்,பங்கேற்ற சகலரும் அவரைப் பற்றிப் புரிந்திருப்பர். நான்,கட்சிக்கும் தலைவருக்கும் விசுவாசமாகவே இருக்கிறேன், விசுவாசமாகவே இருப்பேன். எனது, இந்த விசுவாசத்தை விளங்குவதில் சிலர் தவறுவிடுகின்றனர்.அதுதான் கவலை.அதிலும்,கட்சிக்குள் புதிதாக வந்தோர் புகுத்தி விடும் திருவிளையாடல்களை கட்சியின் முக்கியஸ்தர்கள் கண்டுகொள்ளாதுள்ளமைதான் கவலையளிக்கிறது.

**கட்சித் தலைமைக்கு கட்டுப்படாமல்,சமூக சேவைகள் செய்வதாகத்தானே பலரும் உங்களைப் பற்றிப் பேசுகின்றனர். இது எந்தளவு உண்மை?**

நல்லதைத்தானே செய்கிறேன்.எனது சொந்தச் செலவில் நான் செய்யும் தர்மங்கள், சேவைகளால் கட்சிக்குத்தான் விளம்பரம் கிடைக்கிறதே தவிர எனக்கு கிடைப்பது சொற்பம்தான். பகல் வேளைக்குச் சோறு தேவைப்படும் ஏழைக்கு அரிசிப்பொதி வழங்க, கொழும்பிலுள்ள தலைவரையா தொடர்பு கொள்வது.அவ்வளவு அவசரமாகத் தலைவரைத் தொடர்பு கொள்ளவும் முடிவதில்லையே!பசி போக்கவும் பிணிபோக்கவும் யாருடைய அனுமதியைக் கோர வேண்டும்.

**உங்களது கட்சிக்குள் (தேசிய காங்கிரஸ்) வாரிசு அரசியல் வளர்க்கப்படுகிறதா? இந்த அரசியலை நீங்கள் எதிர்க்கிறீர்களா?**

யார்தான் இதை விரும்பாதிருப்பர்.இந்த அரசாங்கமே வாரிசின் வாடைதானே! ஆனால், எல்லோருக்கும் இதில் வெற்றி கிடைப்பதில்லை.முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் இந்த வாரிசு அரசியலில் விருப்பம் இருந்தாலும், காலத்தைக் கடத்திவிட்டு இப்போது முயற்சிப்பதாகத் தெரிகிறது. என்னைப் பொறுத்தவரை ஆட்சி, அதிகாரம் ஆண்டவனின் புறத்திலிரு ந்து வருவதென நம்புபவன். கட்சிக்காக உழைக்கிறேன், விசுவாசத்துடன் பயணிக்கிறேன் அவ்வளவுதான்.

**பேட்டி- முயலகன்**

## 4 ஆம் பக்க தொடர்ச்சி.....

ஆணையாளருக்கு அனுப்பும் அறிக்கை அனுப்புவதில்தான் தற்போது சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் த.தே.கூட்டமைப்புக்கு வெளியில் உள்ள தமிழ்க் கட்சிகளின் சம்மதங்களும் பெறப்பட்டு அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒருமித்து ஒன்றாக அறிக்கையை அனுப்பும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. தமிழர்களை பொறுத்தமட்டில் எல்லோரும் ஒன்றாக அறிக்கையை அனுப்புவதுதான் அது பெறுமதியாக இருக்கும். இந்த விடயத்தை மட்டும் வைத்துக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது.

சில சில கசப்புகள் எங்களுக்குள் இருக்கலாம் அதனை எமக்கள் பேசி கதைத்து ஒரு குடையின் கீழ் ஒரு கொள்கையின் கீழ் ஒருமித்து பயணிப்பதுதான் தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற வவுவாக அமையும். புதவி மோகத்துக்காக கட்சி பேதங்களுக்காக பிரதசவாதங்களுக்காக பிளவுபட்டால் அது எமது மக்களின் தீர்வைக்கான முடியாதுபோகும். மாறாக எமது மக்களுக்கு துரோகம் செய்யதாகவே அமையும்.

**கல்முனை கண்ணகியம்மன் கோவில் வீதியில் விற்கப்பட்ட காணியில் மதரஷா ஒன்றைக் கட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள் என்று பேசப்படுகிறது.,தை தடுப்பதற்கு என்ன முயற்சி எடுக்கின்றீர்கள்?**

இந்த விடயங்களுக்கு அடிப்படை காரணிகள் என்ன என்பதை பார்க்க வேண்டும். கல்முனை பிரதேசத்தில் உள்ள தமிழ்க் காணிகள் மாற்றாருக்கு விற்பனை செய்யப்படாமலும் இலாப நோக்கோடு வாங்கி விற்பவர்கள் மாற்றாருக்கு விலை போகாமலும் எப்படி தடுப்பது என்பதை தமிழ் சமூகம் என்ற அடிப்படையில் சிந்தித்து நாம் ஒரு கட்டமைப்பை உருவாக்கி செயற்படுத்த வேண்டும். சமூக மட்டத்தின் ஊடாக இதனை தடுப்பது எப்படி என்கின்ற செயற்பாட்டை செய்வதற்கு எமது சமூகத்திலுள்ள அரசியல்வாதிகள் தலைவர்கள் சமூக அமைப்புக்கள் ஆலயங்களின் நிருவாகங்கள் இளைஞர் அமைப்புக்கள் கழகங்கள் உட்பட ஒருங்கமைத்து சீரான வேலைத்திட்டத்தை வகுத்து தடுப்பதற்கான நடவடிக்கைய எடுக்க வேண்டும். இதனை நாங்கள் முன்னின்று செய்யும் போது அதனை அரசியலாக பாாக்கப்படும் அரசியலுக்காக செய்வதாக கூறப்படும். இவ்வாறு பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து வரும்பொது அவர்களுக்கு முழுப்பக்கபலமாக நாமும் செயற்படுவோம். குறித்த காணியில் மதிரஷாவோ பள்ளிவாசலோ அமைவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது . இந்த இடம் முழுமையாக தமிழ் மக்கள் ( இந்து கிருஸ்த்தவம்) செறிந்து வாழும் இடம். இங்கு இவ்வாறு குறித்த மதஸ்தலம் அமைப்பதாக இருந்தால் அது ,னங்களுக்கடையில் வீணான பிளவுகளை ஏற்படுத்தும். இன நல்லிணக்கத்தை ,ல்லாமல் செய்துவிடும். ,ந்த கருத்துக்கு ஆட்சேபனை தெரிவிப்பவர்களிடம் ஒன்றை கூறுகின்றேன். சம்மந்தப்பட்டவர்கள் இதனை தவிர்ப்பது நன்று. இலங்கையில் ஒரு வனக்கஸ்தலமோ மத பாடசாலையோ அமைவதாக ,ருந்தால் நாட்டின் சமய விவகார அமைச்சின் கீழ் தெளிவான சட்டதிட்டங்கள் உள்ளது. அங்கு உரிய சட்டதிட்டங்களுக்கமைவாக அனுமதி பெற வேண்டும். இந்த விடயம் தொடர்பாக நாம் அவர்களுக்கு முறைப்பாட்டை செய்வோம்.

# கிழக்கில் மூடப்பட்ட சதோச கிளைகள் திறக்கப்படுமா?



## மக்கள் அங்கலாய்ப்பு

**ஏ.எல்.எம்.சலீம்**




"கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை" என்பது நம் பிரதேச பேச்சு வழக்கில் உள்ள ஒரு பழமொழி.

தற்போதைய கொரோனா தனிமைப்படுத்தல் காலத்தில் மக்களுக்கு பெரும் சேவையாற்றி வரும் லங்கா சதோச கிளைகள் குறித்து, கிழக்கின் பல தமிழ், முஸ்லிம் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் மேற்படி பழமொழியையே கூறும் நிலையில் உள்ளனர்.

இந்த இடர்காலத்தில், வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, விலையேற்றம்,பதுக்கல் போன்றவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டு வரும் மக்களை,ஓரளவேனும் லங்கா சதோச கிளைகள் கைதூக்கி விடுகின்றன.

அத்தியாவசிய தேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள லங்கா சதோச மூலம், அரசின் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலும் தட்டுப்பாடின்றியும் அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

ஆனாலும், இந்த சேவையையும் வாய்ப்பையும் தமது பிரதேசங்களிலேயே பெற்றுக்கொள்ள தக்க வாய்ப்பின்றி, கிழக்கில் பல பிரதேச தமிழ்,முஸ்லிம் மக்களும் துரதிஷ்ட நிலையில் உள்ளனர்.

அவர்கள் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தமது பிரதேசங்களில் இயங்கிய லங்கா சதோச கிளைகளை இன்றைய அரசு இழுத்து மூடிவிட்டதால், அதன் பயனைப் பெற முடியாது மக்கள் திண்டாடி வருகின்றனர்.

கடந்த நல்லாட்சி அரசில் மக்கள் நலன் கருதி திறக்கப்பட்ட, புனரமைக்கப்பட்ட பல சதோச கிளைகள் அம்பாறை, மட்டக்களப்பு,திருகோணமலை மாவட்டங்களில் இந்த அரசாங்கத்தினால் மூடப்பட்டிருக்கின்றன.

இந்த மாவட்டங்களில் சதோச கிளைகள் மூலம் பயன் பெற்று வந்த தமிழ், முஸ்லிம் மக்களின் வயிற்றில் இதன் மூலம் பெரும் அடி விழுந்திருக்கிறது.

குறிப்பாக, அம்பாரை மாவட்டத்தில் சுமார் 15 வருடங்களுக்கு மேல் இயங்கிவந்த நிந்தவூர் லங்கா சதோச கிளை உட்பட அட்டாளைச்சேனை, பாலமுனை,சென்றல் கேம்ப், சாய்ந்தமருது, மருதமுனை,நட்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் சேவையாற்றி வந்த கிளைகளும்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வந்த காத்தான்குடி,களுவாஞ்சிகுடி, கொக்கட்டிச்சோலை, கிளைகளும் திருகோணமலை மாவட்டத்தில் சேவையாற்றி வந்த மூதூர்,புல்மோட்டை, முள்ளிப்பொத்தானை கிளைகளும் இவ்வாறு இன்றைய ஆட்சியாளர்களால் இழுத்து மூடப்பட்டன.

2020 பிப்ரவரி மாதம் இருபத்தி ஒன்பதாம் நாளுடன் இந்த கிளைகளின் கையிருப்பைக் கணக்கெடுக்குமாறு பணித்த லங்கா சதோச தலைமையகம், அதிரடியாக அடுத்த நாளுடன் வியாபார நடவடிக்கைகளை நிறுத்துமாறு பணித்ததுடன், கிளைகளை இழுத்து மூடியது.

ஆனால், இவ்வாறு மூடப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் பெல்வத்தை, அம்பாரை (இரண்டு ) சென்றல் கேம்ப் கிளைகள் ஒரு மாத காலத்திற்குள் மீள திறக்கப்பட்ட விந்தையும் நிகழ்ந்திருக்கிறது.

மூடப்பட்ட மேற்படி கிளைகளில் வியாபாரம் போதிய அளவு இல்லை நஷ்டத்தில் இயங்கி வருவதாகவும் அதனால்,மூடுவதாக அப்போது இதற்கு காரணம் கூறப்பட்டது.

ஆனால், நல்லாட்சி அரசு காலத்தில் அதுவும், முன்னாள் அமைச்சர் றிஷாத் பதியுதீனின் சேவையால் திறக்கப் பட்டவை என்பதற்காக, அரசியல் பழிவாங்கலாகவே மக்களின் வயிற்றில் அடித்த இச் செயல்பாடு, முன்னெடுக்கப்பட்டதாக, அப்போது மக்கள் பேசிக் கொள்ளவும் தவறவில்லை.

இதனால், மூடப்பட்ட கிளைகளில் பணியாற்றிய பலரும் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

மக்களுக்கான சேவைகளை தொடர்ந்து வரும் எத்தனையோ அரச நிறுவனங்கள், நஷ்டத்தில் இயங்கிய போதும், அவை தொடர்ந்தும் மக்கள் சேவையாற்றி வருகின்றன. ( உதாரணமாக,பெட்ரோலியத் துறையை குறிப்பிடலாம் )

அரசு நிறுவனங்கள் யாவும் இலாப நோக்கத்துடன் மட்டுமே இயக்க படுவதில்லை. அவ்வாறு நோக்கும் போது, மேற்படி சதோச கிளைகள் மூடப்பட்டதை, 'பழிவாங்கல் ' என்று இல்லாமல் வேறு என்ன தான் சொல்வது?

மூடப்பட்ட இந்த சதோச கிளைகளை திறப்பதில் அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் தமிழ்,முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்களே மௌனம் காப்பதன் மர்மம் என்ன என்றும் மக்கள் வினவுகின்றனர். தமிழ்,முஸ்லிம் பிரதேசங்களுக்கு ஒரு நீதி, பெரும்பான்மை மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு ஒரு நீதியா? என அவர்கள் கேட்டுக்கின்றனர்.

கொரோனா பெரும்தொற்று பேரிடர் ஒ காலத்தின் தேவை கருதியாவது, கிழக்கில் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் மூடப்பட்ட,லங்கா சதோச கிளைகளை மீளவும் திறக்க ஆவண செய்யப்படுமா?

எதற்கெல்லாமோ கை உயர்த்தும் புதிய அரசியல் ஞானம் கொண்டவர்களின் கவனம் இது விடயத்தில் இனியாவது திரும்புமா?

## பெரியநீலாவணையில் இராணுவத்தினரால் உலர் உணவுப்பொதிகள் வழங்கிவைப்பு

மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு கல்முனை இராணுவத்தினரால் மனிதாபிமானரீதியில் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. கல்முனை இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் விஜயக்கோன் தலைமையில் 3 ஆம் பிரிவு விஜயபாகு படைப்பரிவினரால் இவ் மனிதாபிமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன. பெரியநீலாவணைக் கிராமத்தில் கொரோனா தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்கள் இராணுவத்தினரிடம் விடுத்தவேண்டுகோளுக்கமைய குறித்த வீடுகளுக்கு நேரடியாகச் சென்ற கல்முனை இராணுவப்பொறுப்பதிகாரி மேஜர் விஜயக்கோன் இவ் நிவாரணப்பொதிகளை வழங்கிவைத்தார். கல்முனை இராணுவத்தினர் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கும் மனிதாபிமான நடவடிக்கையிலும் ஈடுபட்டுவருகின்றனர்.



01ஆம் பக்கம் தொடர்ச்சி...

## மாற்று சமூகத்தை திருப்திப்படுத்த...

படுகொலைகள் பற்றியும் நினைவில் கொள்ள வேண்டுமென கிழக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவருமான இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய அரசியற் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது ;

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் அம்மக்களின் உணர்வுகளை மதித்து தங்கள் கருத்துக்களை வெளியிட வேண்டும். அனைத்து இனங்களையும் மதிக்க வேண்டும் என்பது உண்மையான விடயமே. ஆனால், எம்மின மக்களைக் காயப்படுத்தி அதன் மூலம் மாற்றுச் சமூகத்தைத் திருப்திப்படுத்த எண்ணுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

அண்மையில், எமது பாராளுமன்ற உறுப்பினரொருவர் யுத்த காலத்தின் போது வட மாகாணத்திலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட நடவடிக்கை இனச்சுத்திகரிப்பு என்ற வகையில் இடம்பெற்றது. இது குறித்து தாம் வெட்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இது இன்று நேற்றல்ல அவர் காலா காலமாகச் சொல்லிக் கொண்டு வரும் விடயமே. ஆனால், தேவையற்ற சந்தர்ப்பங்களில் இதனை அவர் குறிப்பிட்டு வருவது தமிழ் மக்களை இன்னும் மனம்நோகச் செய்யும் விடயமாகும்.

எமக்கு மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதும் இல்லை, வாக்களிக்கவும் மாட்டார்கள். எனவே அவர்களைத் திருப்திப்படுத்த எம் சமூகத்தை நோகடிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

வடக்கில் இடம்பெற்ற இனச்சுத்திகரிப்பு பற்றி நீலிக்கண்ணீர் வடிக்கும் எம்மவர்கள், கிழக்கில் மாற்றுச் சமூகத்தினால் இடம்பெற்ற இனஅழிப்பு தொடர்பில் ஏன் கருத்திட மறுக்கின்றார்கள்.

வரலாறு என்பது அனைவருக்கும் ஒன்றே. ஒரு இனத்தை அழிக்காமல் அவர்களை உயிருடன், பாதுகாப்பாக வெளியேற்றியமை தொடர்பில் வெட்கப்படும் நம்மவர்கள், எமது இன மக்களை கொத்துக் கொத்தாகக் காட்டிக் கொடுத்தும் எல்லைப் புறக் கிராமங்களில் வெட்டியும், சுட்டும் இனஅழிப்புச் செய்த விடயத்திற்கு என்ன சொல்லப் போகின்றார்கள். எத்தனை அழிப்புகள் கிழக்கில் இடம்பெற்றன. இதற்கெல்லாம் வெட்கப்பட மாற்றுச் சமூகத்தில் இரந்து எந்தப் பிரதிநிதியும் வரமாட்டார்கள்.

ஊர்காவற்படை, புலனாய்வாளர்கள் என்ற பெயரில் எத்தனையோ அழிப்புகள் கிழக்கில் இடம்பெற்றன. இந்த அழிப்புகளில் கிழக்கு மாகாணத்தில் எத்தனை தமிழ் கிராமங்கள் இல்லாமல் போயிருக்கின்றன. இவைகளை பற்றியும் சற்று அறிந்து கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் யார் வெட்கப்படப் போகின்றார்கள்.

வெறுமனே தாம் அறிந்த விடயங்களை வைத்து மாத்திரம் கருத்திடல் தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்தாத ஒன்றாகும். கிழக்குத் தமிழ் மக்களையும் நினைவில் வைத்து தங்கள் கருத்துக்களைப் பதிவிடுங்கள். பாதிப்புற்ற ஒரு சமூகம் தமக்காக பாடுபடும் கட்சி என்ற நம்பிக்கையில் தான் எம்முடன் அன்ற தொட்டு இருக்கின்றார்கள். அந்த நம்பிக்கையைச் சீர்குலைக்கும் விதத்தில் கருத்துக்கள் வருவது நல்லதல்ல.

மேற்குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினரின் செயற்பாடுகள், நடவடிக்கைகளை நாம் மதிக்கின்றோம். ஆனால், இவ்வாறான கருத்துக்கள் மூலம் அவர் மீது கொண்டுள்ள மதிப்பினை அவரே குறைத்துக் கொள்ளக் கூடாது. எமது பிரச்சினைகள் தொடர்பில் அவரால் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படுகின்ற விடயங்கள் முக்கியம் வாய்ந்தவை. இருப்பினும், தாம் இடும் கருத்துக்கள் தொடர்பில் அவர் கரிசனை கொள்ள வேண்டும். இனியாவது அவர் விடுகின்ற அறிக்கைகள் மேலும் மேலும் நிந்தனைக்குள்ளான தமிழ் சமூகத்திற்கு இன்னலை ஏற்படுத்துவதாக அமையக் கூடாது என்பதே எமது நோக்கம், எமது மக்களின் நோக்கமும் அதுவேயாகும் என்று தெரிவித்தார்.

01ஆம் பக்கம் தொடர்ச்சி...

## டெல்டாவுக்கு அஞ்ச வேண்டாம்...

(மக்கள்) பெற்றுக் கொண்டாலும் இத்தாக்கங்களில் இருந்து பாதுகாக்க சில நாட்கள் செல்லும் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

நேற்று (10) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது ;

கிழக்கு மாகாணத்தில் உள்ள 4 பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் கொரோனா வைரஸின் பிறழ்வு வகை, டெல்ரா வகை திரிவு பரவலாக அதிகரித்துள்ளமை தொடர்பில் ஆய்வு கூட அறிக்கைகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

கொரோனா மூன்றாவது அலையில் மொத்தமாக 42,784 நோயாளர்களும் 772 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் ஓகஸ்ட் மாத மூன்றாம் நான்காம் வாரங்களில் நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்பட்டிருந்தது.

எனினும்,செப்ரெம்பர் மாதத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்து இருந்தாலும், எமக்கு ஆறுதலாக இருந்தாலும், இது மேலும் இவ்வாறு குறைவடைய செய்வது பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையிலும் இரண்டு தடுப்பூசிகளை பெறுவதிலும் ஏனைய தொற்றா நோய்களான நீரிழிவு நோய் உயர்குருதி அமுக்கம், ஏனைய சுவாச இருதய நோய்கள், இவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.

ஏனெனில், இந்நோய்கள் இருப்பவர்களும் தடுப்பூசி முற்றாக பெறாதவர்களும் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களுமே அதிகமாக மரணத்தை தழுவியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் எமக்கு போதுமான வகையில் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால், தடுப்பூசியை இதுவரை பெறாதவர்கள் அவர்களது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சென்று தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

எமக்கு தேவையான முழு தடுப்பூசிகளையும் அரசாங்கம் வழங்கி கொண்டிருக்கின்றது. மேலும் இப்பிராந்தியத்தில் உள்ள 20 வயது முதல் 30 வயது வரையானவர்களுக்கும் தடுப்பூசி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கம் தற்போது அமுல்படுத்தியுள்ள சட்டதிட்டங்களை மக்களாகிய நீங்கள் அலட்சியம் செய்யாமல் தங்களது நலனில் ஒவ்வொரும் அக்கறை எடுக்க வேண்டும்.டெல்டா திரிபு என்பதை பற்றி பயப்பட வேண்டாம்.ஏனெனில் 2 தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கு இதன் தாக்கம் குறைவாக உள்ளதை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது.

ஆகவே, தடுப்பூசிகளை நீங்கள் (மக்கள்) பெற்றுக்கொண்டாலும் இத்தாக்கங்களில் இருந்து பாதுகாக்க சில நாட்கள் செல்லும். எனவே தேவையற்ற ஒன்று கூடல்களை தவிருங்கள். முகக்கவசங்களை நேர்த்தியாக அணியுங்கள். சமூக இடைவெளிகளை பின்பற்றி கொள்ளுங்கள். மேலும் செப்டெம்பர் இறுதி பகுதியில் எமது பகுதியில் இந்நோய் தாக்கம் மேலும் மேலும் குறைவடைந்து செல்லும் என்பதை எதிர்பார்க்கின்றோம் என்றார்.

03ஆம் பக்கம் தொடர்ச்சி...

## தமிழர் பகுதிக்குள் மதரசா அமைக்கும் முயற்சி...

பொத்துவில், அக்கரைப்பற்றிலிருந்து ஒட்டமாவடி வரை உள்ள பிரதான வீதியை நோக்கினால், காணி பிடிக்கும் பாய்ச்சலை இப்போதும் நாம் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

தமிழர்கள் நினைத்தால் முக்கிய இடங்களில் எல்லாம் சிலைகளையும் வைக்கலாம்; விகாரைகளையும் பிரதிஷ்டை செய்யலாம். ஆனால், நாங்கள் அப்படி செய்யவில்லை. செய்யப் போவதுமில்லை. இந்த ஒழுக்கத்தை முஸ்லிம்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் உளப்பூர்வமான விருப்பமாகும்.

முஸ்லிம்களை நாங்கள் எப்போதும், எதிரிகளாக பார்ப்பதில்லை. சிறுபான்மை இனமாக இரு சமூகங்களும் ஒன்றுபட வேண்டும் என்ற தேசிய சிந்தனையோடு செயல்படுபவர்கள் நாம்.

ஓர் இனத்தின் இருப்பிடங்களை கபளீகரம் செய்து எந்த ஒரு இனமும் நிம்மதியாக வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. ஆகவே, மதரஸாக்களையும் பள்ளிவாசல்களையும் இன்னொரு இனத்தின் முதுகெலும்பின் மீது கட்ட நினைப்பது என்பது அவர்களின் உணர்வுகளையும் தன்மானத்தையும் உஷப்பி விடுவதாக இருக்கும்.

என் அன்பான முஸ்லிம் சகோதரர்களிடம் நான் கேட்பதெல்லாம் தமிழர்களின் உணர்வுகளை உரசிப் பார்க்காதீர்கள். மதரஸாக்கள், பள்ளிவாசல்கள், விகாரைகள், கோயில்கள் கட்டுவதாக இருந்தால், மத விவகார அமைச்சிடம் முன் அனுமதி பெற வேண்டும். அப்படி அனுமதி பெறாத எந்த ஒரு மத ஸ்தலங்களும், சட்ட விரோதமானவை என்பதை, இத்தகைய ரகசிய செயல்பாடுகளில் ஈடுபடும் அடிப்படைவாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே, தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிக்குள் கள்ளத்தனமாக மதரஸா அமைக்கும் பணி நிறுத்தப்படாவிட்டால் மக்களைத் திரட்டி தொடர் போராட்டங்களை நடத்துவதை தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை. இந்த நயவஞ்சகமான செயற்பாடு கட்டாயம் நிறுத்தப்படவேண்டும். தவறினால், கடுமையான போராட்டங்களை நாங்கள் முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம். இவ்வாறு ராஜன் கல்முனைநெற்றிடம் இடம் கூறினார்.

03ஆம் பக்கம் தொடர்ச்சி...

## உலகுக்கு சரியான பாடம் கற்பித்த...

தாக்குதல் நடத்தியவர், இலங்கையைச் சேர்ந்தவர் என்பதற்கு அப்பால், பயங்கரவாதச் செயலில் ஈடுபட்ட நபரை பற்றி வேறு எந்த ஒரு விடயமும் பொலிஸாரால் வெளிப்படுத்தப்படவில்லை. அந்நாட்டு ஊடகங்களும் குறிப்பாக சமூக வலைதளங்களும் எவ்வளவு தார்மீக பொறுப்போடு செயல்பட்டது என்பதை முழு உலகமும் மூக்கில் விரல் வைத்துப் பார்த்துக் கொண்டுதான் இருந்தது.

நீதிமன்ற அனுமதி பெற்ற பின்பே பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டவர் பற்றிய முழுமையான விவரங்களை பொலிஸார் வெளியிட்டனர்.

அந்த நாட்டின் நீதித்துறையும் ஊடக நெறிமுறைகளும் தார்மீகப் பொறுப்பும் எவ்வாறு செயல்பட்டு இருக்கின்றது என்பதற்கு இது நல்லதொரு எடுத்துக் காட்டு.

ஒரு எதிர்பாராத சம்பவம் ஒன்று நடைபெறும் போதும் ஊடகங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு நியூசிலாந்து நல்லதொரு பாடத்தை கற்பித்து இருக்கிறது.

இனம்,மதம் மற்றும் அவர் சார்ந்த சகல விடயங்களையும் நேரலையில் ஒலி/ஒளிபரப்பில் காண்பித்து மக்களை வெறுப்பேற்றுவதோடு ஆத்திரமடையச் செய்யும் இன்றைய ஊடக கலாச்சாரத்தில், தார்மீகம் பேணுவது எப்படி என்பதை நியூசிலாந்து நமக்கு துல்லியமாகச் செதுக்கி காட்டியிருக்கிறது.

தாக்குதல் நடத்திய முஹம்மது ஆதில் சம்சுதீன் என்பவர், பயங்கரவாத குழு ஒன்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தனி நபர் என்பதில் ஊடகங்களும் தெளிவாகவே செயல்பட்டிருக்கின்றன. தாக்குதல்தாரி எந்த இனம் என்பது இங்கே பேசப்படவே இல்லை.

ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பை எப்படி கையாள வேண்டும் என்பதற்கு நியூசிலாந்து அரசாங்கத்தின் செயல்பாடு நல்லதொரு வழிகாட்டியாக அமைகிறது.

கத்திக்குத்து தாக்குதல் நடத்திய பயங்கரவாதி, தாக்குதல் நடத்திய போது ‘அல்லாஹு அக்பர்’ என கோஷம் எழுப்பியவாறு வெறித்தனமாக கத்தியால் குத்தி உள்ளார். உடுக்கை இழந்தவன் கை போல செயல்பட்ட பொலிசார் ஸ்தலத்திலேயே அவனை சுட்டுக் கொன்றனர்.

இது எப்படி சாத்தியமாகியது என்று உலகமே என்று ஆச்சரியத்துடன் கேள்வி எழுப்பியிருக்கிறது. நியூசிலாந்தின் தேசிய பாதுகாப்பு என்பது இங்கு தான் உச்சம் பெற்று இருக்கிறது. தாக்குதல்தாரியான ஆதில், பல்கலைக்கழக அனுமதி பெற்றே நாட்டுக்குள் வந்தவர். கடந்த பத்தாண்டுகளாக நியூசிலாந்தில் வாழ்ந்து வருகிறார். என்றாலும், ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற பயங்கரவாத கொள்கை உடையவர்களுடன் இணைந்து செயல்படுகிறார் என்பதை புலனாய்வுத்துறை அறிந்து கொண்டது. அவருடைய சமூக வலைத்தளப் பதிவுகளும் அவர் தனியான குரூப் ஒன்றை உருவாக்கி ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பில் இருக்கிறார் என்பதையும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் நன்கு அறிந்து கொண்டதோடு, அவரை பின்தொடர தொடங்கினர்.

ஆதிலை நாடுகடத்துவதற்கு எடுத்த முயற்சிகளும் நீதிமன்றால் தடுக்கப்பட்டன. ‘தான் இலங்கை திரும்பினால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவேன்’ என அவர் நீதிமன்றில் ஒப்புவித்ததையடுத்து, நீதிமன்றம் அவருக்கு கருணை காட்டியது. என்றாலும், அவர் தனது பயங்கரவாத கொள்கையை கைவிட்டதாக இல்லை.

ஒரு தடவை இவர் சிரியா செல்வதற்கு முயன்ற போது, விமான நிலையத்தில் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இதன்போதும் நீதிமன்றம் இவருக்கு பிணை வழங்கியதோடு, பள்ளிவாசல்களின் கண்காணிப்பின் கீழ் இவரை வைக்குமாறு அரசுக்கு உத்தரவிட்டது. பள்ளிவாசல்களின் கண்காணிப்பின் கீழ் இவர் இருந்தாலும்,தொடர்ச்சியாக இவரை பின் தொடர்ந்த புலனாய்வுத் துறையும் பொலிசாரும் இவரது நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டு பல தடவைகள் கைது செய்தனர். என்றாலும், நீதிமன்றம் இவருக்கு பிணை வழங்கியே வந்தது.

இந் நிலையில்தான், சம்பவ தினமும் இவரை பொலிசார் பின்தொடர்ந்தனர். சிறப்பு அங்காடிக்குள் சென்ற ஆதில், வெறித்தனத்துடன், செயல்படுவதை அவதானித்த பொலிசார் உள்ளே நுழைந்து அவரை சுட்டுக் கொன்றனர்.

ஒரு பயங்கரவாதிக்காக அவர் சார்ந்த இனமோ, மதமோ தண்டிக்கப்படவோ வஞ்சிக்கப்படவோ கூடாது என்பதற்கு ஆதிலின் முடிவு நல்ல படிப்பினையாக இருக்கிறது.

இவரை கண்காணிக்க 30 பேர் கொண்ட சிறப்பு பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டு இருந்ததோடு, ஐம்பத்தி மூன்று நாட்கள் தொடர்ச்சியாக 24 மணி நேரமும் இந்த விசேட குழு இவரை பின் தொடர்ந்ததாக நியூசிலாந்து பொலிஸ் ஆணையாளர் அறிவிக்கின்றார்.

அவர் சார்ந்த சமூகமும் மதப் பிரதிநிதிகளும் துன்புறுத்தப்படாமல், ஒரு பயங்கரவாதியையும் அவன் சார்ந்த செயல்பாடுகளையும் எப்படி முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதென்பது உலக வல்லரசுகளுக்கும், இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கும் நல்லதொரு படிப்பினையாக இருக்கின்றது.

நாட்டைஅல்லோலகல்லோலப்படுத்தாமலும் பதற்றங்களை ஏற்படுத்தாமலும், தேசிய பாதுகாப்பு நடவடிக்கை எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு, நியூசிலாந்து சொல்லிக்கொடுத்திருக்கும் பாடம், உலகுக்கு ஒரு முன் மாதிரியாக இருக்கிறது.

# ஸ்ரீ தேசிய விருது பெற்ற இளம் பாடகர் சபேசன்



அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் விநாயகபுரம் எனும் இயற்கை வளங்கள் நிறைந்த கிராமத்தில் சுகிர்தராஜா ஜெயந்தி தம்பதிகளின் மகனான பிறந்தவர்தான் சபேசன். இவர் ஆரம்பக் கல்வியை திகோ/விநாயகபுரம் மகாவித்தியாலயத்திலும் உயர்கல்வியை திகோ/மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் நுண்கலைமானி பட்டம் பெற்றவர்.

பெற்றோர்களின் பங்களிப்பு அதிகமென்பதால் சிறுவயதிலிருந்தே இசைத்துறையில் ஆர்வம் கொண்டு கர்நாடக இசையை தரம் 6 இல் இருந்து பல்கலைக்கழகம் வரை ஒரு பாடமாகப் பயின்று பட்டம் முடித்துள்ளார். கர்நாடக இசையை இவருக்கு ஊட்டிய பெருமை ஆசிரியர்களான செல்வி பரமேஸ்வரி, திருமதி மோகனா, திரு.த பிரதீபன் ஆகியோருக்கு உண்டு. பாடசாலை காலத்தில் தமிழ் மொழி தினம், ஆங்கில மொழி தினம் மற்றும் பண்ணிசைப் போட்டிகளிலும் கலந்து முதலிடம் பெற்றுள்ளார். வட இலங்கை சங்கீத சபை பரிட்சையில் சிறப்பு சித்தியும் பெற்றார்.

இவரது இசைப் பயணத்தில் படிப்படியாக தன்னை வளர்த்து 2013இல் சக்தி தொலைக்காட்சி நடாத்திய சக்தி சூப்பர் ஸ்டார் புரோவின்சியல் பிரீமியர் லீக் பாடல் போட்டியில் இரண்டாமிடம் பெற்றார். 2019 இல் 41வது தேசிய இளைஞர் விருது வழங்கும் போட்டியில் இளம் பாடகர் பிரிவில் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்று சிறந்த பாடகருக்கான தேசிய விருதையும் வென்றார். 2020 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழக தமிழ் சங்கம் நடத்திய நாத சங்கமம் இணையவழி பாடகர் போட்டியில் இரண்டாமிடம் பெற்றார்.அமெரிக்க அறிவியல் மற்றும் சமூக மேம்பாட்டு நிறுவனம் நடாத்திய இணையவழி பாடல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். இவரது குரலில் சைவபக்தி பாடல்களான தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயம், விநாயகபுரம் சிவன் ஆலயம், அம்பிளாந்துறை கண்ணகி அம்மன் ஆலயம், மண்டபத்தடி பிள்ளையார் ஆலயம், சீரடி சாய் பாடல், திருக்கோவில் அக்கிராசபிள்ளையார் ஆலயம், வளத்தாப்பிட்டி அம்மன் ஆலயம் , திருவெம்பாவை பாடல்கள் போன்ற பாடல்களும் இறுவெட்டுக்களாக வெளியாகியுள்ளன.

கிறிஸ்தவ பாடல்களாக அம்மாஎன் தாயே, ஒருவரே நீர், ராஜரீகம் பண்ணும் தேவன், பரலோகத்தின் உள்ளே, என்னை அழைத்தீர், உன்னாலே தானே, என்னை அழைத்தவர் நீர் அல்லவா, போன்ற பாடல்களையும் பாடியுள்ளார். இதைவிட ஈழத்து திரைப்படமான வேட்டையனில் “பனிக்காத்து வீசயில”, “உயிர் காதலி”, “உன்னோடு நானும் சேர”, “ஒரு வரி கவிதை நீ”, நீ என் உயிர் உறவு, புது வெளிச்சப் பூவாய்” போன்றவற்றை பாடல்களையும் பாடியுள்ளார்.

சபேசன் ஒரு சமூக பணியாளராக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல நிகழ்ச்சிகளில் முன்னின்று செயற்பட்டுள்ளார் காலி இசைச் சங்கமம், பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான இசை சமாதான கருத்தரங்கு சீசன் 1,2,3 இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நடத்துகின்ற இலங்கையில் தோற்றம் பெற்ற பழைய பாடல்கள் பாடல் நிகழ்ச்சியிலும் கலந்து உள்ளார். சமாதானத்தில் இளைஞர்களின் பங்களிப்பு அம்னேஸ்டி இன்டர்நேஷனல் நடாத்திய செயலமர்வு, கதிர்காம முருகன் இசை நிகழ்வு, ஆர்ட்ஸ் ரூ ரைட்ஸ் கலைகளின் உரிமை இசை செயலமர்வு, தியாகராஜர் ஆராதனை, மழை தென்றல் நிகழ்வு மற்றும் ஊவா வெல்லச பல்கலைக்கழகம் போன்ற ஏராளமான கல்வி மற்றும் இசை செயலமர்வில் கலந்து சிறப்பித்துள்ளார்.

சிறுவயதிலிருந்தே தனது தந்தையாரின் இசைக்குழுவான ஜெயாலயா இசைக்குழுவில் தனது முதல் மேடை இசைநிகழ்ச்சியில் பங்கேற்றார். அதிலிருந்து தனது கல்வியோடு சேர்த்து இசைத் துறையிலும் பல்வேறு கஷ்டங்கள், நிராகரிப்புக்களை கடந்து தனது திறமையை வளர்த்துக் கொண்டார். அதன்பிறகு பல்வேறுபட்ட இடங்களில் பல்வேறுபட்ட இசை நிகழ்ச்சிகள் மூலமாக தனது இசைத் திறமையை வெளிக்காட்டி வருகின்றார். உதாரணமாக புதிய ஸ்வரம், சுருதி ஸ்வரம், ஆரோகனா, சப்தஸ்வரம், அக்னி, ஸ்ருதிலயா, சூர்யாஸ், அனிஸ்வரா, தீபம்ஸ் போன்ற இசைக் குழுக்களின் இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று இன்றளவும் பாடி வருகிறார்.

குறிப்பாக இந்திய திரை இசை பின்னணி பாடகர்களான உன்னி கிருஷ்ணன், வி.வி பிரசன்னா, விஜய் டிவி சூப்பர் சிங்கர் புகழ் ஆனந்த் அரவிந்தக்ஷன் போன்ற பாடகர்கள் உடன் இணைந்து பாடி அவர்களது பாராட்டையும் பெற்றுள்ளார். தனது இசைப்பயணத்தின் வளர்ச்சிக்கு உதவிய பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், இசையமைப்பாளர்கள், இசைக் குழுக்களின் தலைவர்களுக்கும் நன்றியுண்வோடு இருக்கிறார். இந்திய சினிமாவில் பாடல் பாடும் எதிர்கால லட்சியத்தோடு பயணிக்கும் சபேசன் யார் எப்படி உங்களை நிராகரித்தாலும் உங்கள் திறமையை வளர்த்துக் கொண்டால் உங்களுக்கான அங்கீகாரம் கிடைத்தே தீரும் என்பதற்கு ஓர் முன்னுதாரணம். இவரது கனவு மெய்ப்பட எமது வாழ்த்துகள்.




# நிந்தவூர் கவி சப்னா லத்தீப்



நிந்தவூர் கவி என்று அழைக்கப்படும் சப்னா லத்தீப் லத்தீப் மற்றும் நபீஸா ஆகியோருக்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தவர் நிலாத்தோழி, கவியரசி, கவியிறகு, நிலாரசிகை என பல புனைபெயர்களில் எழுத ஆரம்பித்து தற்போது நிந்தவூர் கவி எனும் புனைப்பெயரில் கவிதைகள், தொடர் கவிதைகள், ஹைக்கூ கவிதைகள், கட்டுரை, மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வருகிறார். இதைவிட சுயாதீன ஊடகவியலாளர் நிகழ்ச்சித் தொகுப்பாளர் மற்றும் தயாரிப்பாளர், ஒரு தனியார் நிறுவனம் ஒன்றில் மக்கள் தொடர்பு மேலாளர், சமூக சேவைகள் பல செய்து வருகின்ற International Kinniyan Mamu Pvt எனும் சர்வதேச தனியார் நிறுவனமொன்றின் ஆலோசகர், ஊக்கமூட்டும் பேச்சாளர் என பல பரிணாமங்களில் இலக்கிய உலகில் வலம் வருகிறார்.


பாடசாலைக்காலங்களில் இருந்து கட்டுரை, பேச்சு, வாசிப்பு, அறிவிப்பு போன்றவற்றில் அதிக ஈடுபாடு இருந்ததன் காரணமாகவும் நடுத்தர வயதில் இருக்கும் போது தனது சகோதரியின் கவிதைகள் மூலமாகவும் ஈர்க்கப்பட்டு நஸீரா ஆசிரியை, அஸிஸா ஆசிரியை மற்றும் றிஸ்லா ஆசிரியை ஆகியோரின் வழிகாட்டலாலும் இவர் இலக்கிய துறையில் நுழைந்தார். தனது கன்னி கவிதையான தாய்க்கு மகளின் மடல் 2012இல் விடிவெள்ளி பத்திரிகையில் பெண்மணிக்காக பக்கத்தில் பிரசுரமானது. பின்னர் தினகரன், தமிழன், வண்ண வானவில், துணிர்ந்தெழு போன்ற பத்திரிகைகளிலும் இன்று வரையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் பிரசுரமாகி இருக்கிறது.

ஆயிரம் கவிஞர்கள் கவிதை புத்தகத்திலும் இவரது கவிதைகள் 2 இடம்பிடித்தது. மேலும் சக்தி பண்பலை சூரியன் பண்பலையிலும் பல கவிதைகள் ஒலிபரபபாகின. எனது மக்னியின் திறவுகோல் எனும் தொடர் கவிதை இந்திய வார இதழ் ஒன்றில் தொடர்ந்து பிரசுரமாகி இருக்கிறது. இவருக்கு அறிவிப்புத் துறையிலும் சமூக சேவைகள் செய்வதிலும் அதிக ஈடுபாடு கொண்டவர் ஒப்பனை கலை துறை, ஆடை வடிவமைப்புத்துறை, ஓவியம், வர்த்தகத் துறையிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.

சிறந்த சமூக சேவையாளர் விருது, கலைத்துறையின் சிறந்த கலைஞருக்கான விருது, இளம் ஊடகவியலாளர் விருது, கவிக்குயில் விருது, இளம்சமாதான ஊடகவியலாளர் விருது, இவர் தயாரிப்பில் வெளியான நேர்முக கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு சிறந்த தயாரிப்பு மற்றும் நெறியாள்கைகான விருது, ருனேீ அமைப்பினால் நடாத்தப்பட்ட ஆவணப்படுத்தல் போட்டியில் சிறந்த தமிழ் மூல ஆவணத்திற்கான விருது என பல விருதுகளுக்கு சொந்தக்காரரான சப்னா லத்தீப் அவர்களின் கலைப் பயணம் சிறப்பாய் நகர எமது வாழ்த்துகள்.

# கவிஞர் பாண்டியூரன்

குமாரசுவாமி கணபதிப் பிள்ளை என்ற இயற் பெயரை கொண்ட கவிஞர் பாண்டியூரன் 12,07.1935 ல் கல்முனை வடக்கில் உள்ள பாண்டிருப்பு என்னும் ஊரில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை பாண்டிருப்பு இந்து வித்தியாலயம், நாவலர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்றார். பின்னர் ஆசிரிய பயிற்சி பெற்று நல்லாசிரியராக பல இடங்களில் பணிபுரிந்துள்ளார். இவர் இறுதியாக பணியாற்றிய பாடசாலை மருதமுனை அல்மனார் பாடசாலையாகும். தனது இளமைக்காலத்திலிருந்தே தமிழ் மொழியிலும்,தமிழ் இலக்கியதிலும் மிகுந்த ஈடுபாடும்,ஆர்வமும் கொண்டிருந்தார். அதனால் இவர் தமிழ் பற்றுடன் தன்னை ஒரு கவிஞராக உயர்த்திக்கொள்ள முடிந்தது.



இவர் மண் வாசனை மிக்க கவிதைகளை அதிகமாக எழுதியுள்ளார். அவை இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. மேலும் இவர் வர்க்க ரீதியிலான சுரண்டல், தமிழ் தேசியம், சுதந்தி வேட்க்கை,ஏழ்மை,காதல் ஆன்மீகம் என்று பல தளங்களில் தனது கருத்துக்களை கவிதைகள் மூலம் சமூகப் பரப்புக்கு பொது வெளியில் கொண்டுவந்தவர். இவரது கவிதைகளின் எண்ணிக்கை,இவர் எடுத்துக்கொண்ட பாடுபொருள்கள் தொடர்ந்து அவர் எழுதிய கவிதைகள், கவிதை வடிவில் அவர் ஏனைய படைப்பாளிகளுடன் அவர் பரிமாறிக்கொண்ட கடிதங்கள் போன்றவை இவருக்கும் கவிதைக்கும் இடையே இருந்த உறவை நன்றாக எடுதுக்காட்டும் வகையில் உள்ளன. இவர் தமிழ் தேசியத்தில் மிகுந்த பற்றும், ஈடுபாடும் கொண்டிருந்தார். அதனால் அவரது கவிதைகள் அது பற்றியும் பேசியது. இவரும் பல மேடைகளில் பேசியுள்ளார்.

நான் எண்பதுகளின் ஆரம்பத்தில் திருமணம் முடித்து , மனைவியுடன் பாண்டிருப்பில் ஒரு சில வருடம் இருக்க வேண்டி வந்தது. நான் கொழும்பிலிருந்து வந்து வீட்டில் இருக்கும்போதெல்லாம் இவர் வந்து என்னுடன் மிக அன்பாக “அத்தான் அத்தான்” என்று பேசுவார். தொலைக்காட்சியில் என பாடல்கள் பார்த்துமகிழ்ந்தது பற்றிசொல்வார். பழகுவதற்கு மிக அருமையான மனிதர். நான் தாயாகத்தை விட்டு புலம்பெயரந்தபின்னர் இவர் 1990. ல் காணாமல் ஆக்கப்பட்டார் என்ற செய்தி அறிந்து மிக கவலையுற்றேன். இவருடைய படைப்புகள் நூலுரு பேறா போதும் இந்த பகுதியில் வாழும் இலக்கியர்கள் மத்தியில் என்றும் அவை பேசப்படக்கூடியவை. இவர் 02.07 1990 தனது 55 வயதில் மறைந்தார், கவிஞர் பாண்டியூரன் புகழ் நாமம் என்றும் வாழும்.

**கோவிலூர் செல்வராஜன்**

# சாபத்திலும் வரமுண்டு

கலம்பகம்

**க.மங்களேஸ்வரி**

எம் இலக்கியங்கள் காலத்திற்கு ஏற்றாற்போல் ஏதோ ஒரு படிப்பினையை உணர்த்திச் செல்கின்றன. ஒருவரை வாழ்த்திய காலம் சென்றொழிந்து வசை பாடியே எம்மவரை வீழ்த்துகிற காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சில வேளைகளில் நாம் அறியாமற் செய்த தவறே மன்னிப்பின்றிய சாபத்தினைப் பரிசாகக் கொடுத்து விடுகின்றது. ஆனால் சாபத்திலும் வரமுண்டென்பதை கம்பர் தன் இராமாயணத்திலே தசரதன் வாயிலாகக் காட்டியுள்ளார். காட்டிலே தவம் செய்து கொண்டிருந்த சலேப முனிவர் கொடுத்த சாபம் பற்றி கோசலையிடம் தசரத மன்னன் கூறுவதாக கம்பர் தன் செய்யுளிலே பின்வருமாறு கூறுகிறார்.

“பொன்ஆர் வலயத்தோளான்
கானோ புகுதல் தவிரான்
ஒழியாது இது கோசலை கேள்
முன்நாள் ஒருமா முனிவன்
மொழியும் சாபம் உளது என்று
அந்நாள் உற்றது எல்லாம்
அவளுக்கு அறைவான் “



மகப்பேறு இல்லாத நேரமதில் தசரதன் காட்டிற்குச் சென்ற போது அந்நேரம் தசரதன் எய்த அம்பானது பெட்டகத்திலே நீர் எடுத்துக் கொண்டிருந்த இளைஞனின் மீது பட்டது. அதனைக் கண்டு அதிர்ச்சியில் ஆழ்ந்த தசரதன் “நீ நீர் எடுக்கும் ஓசையானது யானை நீர் அருந்துவது போலிருந்ததால்தான் அம்பெய்தேதன் என்னை மன்னித்து விடு “ என்றார். “விதிவசத்தால் நிகழ்தது. என் பெயர் சுரோசனன். காட்டிலே தவம் செய்து கொண்டிருக்கும் பார்வைகளற்ற என் பெற்றோருக்கு நானே கண்ணாயிருந்து பணிவிடை செய்து வந்தேன். என் தந்தையின் பெயர் சலேப முனிவர். நீங்கள் நீரினை எடுத்துச் சென்று அவருக்குக் கொடுங்கள். நீர் அருந்திய பின் என் நிலையை எடுத்துக் கூறுங்கள்” என்று சொல்லி இறந்தான். தசரதன் நீரினை எடுத்துக் கொண்டு முனிவரிடம் விரைந்து சென்றான். முவரிடம் நீரைப் பருகும் படி கொடுத்த போது அவன் கைகளில் சந்தண மணம் கமழ்வதின் மூலம் தனது மகன் இல்லை என்பதை ஊகித்துக் கொண்ட முனிவர் “நீ யார்? “ என்று கேட்டார். “நான் இந்நாட்டின் மன்னன். “ என்று தொடங்கி நடந்ததைக் கூறினான். தன் மகன் இறந்ததை எண்ணி அழுது புலம்பிய முனிவர் ஒருவாறு தெளிவடைந்து “உன் தவறை உணர்ந்து எங்கள் காலில் சரணடைந்தாய் . ஆனாலும் என் மகனைப் பிரிந்து நான் எவ்வாறு தவிக்கிறேனோ! அதே போல் நீயும் உன் மகனைப் பிரிந்து வருந்தி இறப்பாய் “ என்று சாபமிட்டு இறந்தார். இதனைக் கம்பர்

“தாவாது ஒளிரும் குடையாய்
தவறு இங்கு இது நின் சரணம்
காவாய் என்றாய் அதனால்
கடிய சாபம் கருதோம்
ஏவா மகனைப் பிரிந்து இன்று
எம்போல் இடர் உற்றனை நீ
போவாய் அகல்வான் என்னா
பொன் நாட்டிடை போயினரால் “ என்றார்.

இந்தச் சாபமே தசரதனுக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தந்தது. காரணம் இத்தனை வருடங்களாக குழந்தை பாக்கியமே இல்லாது தவித்த தசரத மகாராசனுக்கு முனிவரின் சாபத்தின் நிமித்தம் தனக்கு வாரிசு வரப் போவதை எண்ணி அளவில்லா ஆனந்தமடைந்தான். எனவே எம்மைச் சிலர் சபிக்கின்றனர் என்று புலம்பித் தள்ளுவதை விடுத்து சாபத்திலும் வரமொன்றிருக்கிறது என்பதை உணர்க.

## பெண் நிலை

கருவறை முதல் கல்லறை வரை
அனைவராலும் தேடும்
ஒரு பொக்கிஷம் பெண்

தேடி தேடி தொலைத்தாலும்
விடை தெரியா புதிரும்
பெண்
என்று ஒரு பெண் சேயை பெற்றெடுத்து
பெருமை தாய் அடைகிறாளோ
அன்றே ஆரம்பம் ஆகும்
அவளின் சாதனை தடம்

உலக அதிசயங்கள்
வரிசையிலே பெண்ணுக்கும் இருக்காதோ
ஓர் இடம் அவள் என்றும்
கொண்டாட வேண்டிய மகுடம்
ஆனாலும் கல்லும் முள்ளும் நிறைந்த
பாதைதான் அவளின் கொடூரம்
நித்தம் உலகத்தை நிரப்பும் அவள் சா

தனை
ஆனாலும் தீராத வியாதியாய் தீ போல்
பரவும் அவளின் சோதனை
தனி அறையில் தனையணை சொல்லும்
இன்னும் அவள் வேதனை

சாஸ்திரங்கள் சரித்திரங்கள்
கவி வடிக்கும் கையெழுத்தில் ஆன பே~
ாதும்
மந்திரங்கள் தந்திரங்கள் புடை சூழும்
அவள் தலையெழுத்தில்

மாற்றம் கொண்டு ஆடவர் மாறாத வரை
முன்னேற்றம் இன்றி
ஏமாற்றமே தடுமாற்றமே அவளின் அவல
நிலை

**அஸ்மியா றமீஸ்**
**சம்மாந்துறை**

# இசைத்துறையில் அர்ப்பணிப்புடன் செற்படும் எழில்வேணி சுதர்சன்





கலைகளில் இசைக்கலை மிக உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளது. இன்பக் கலைகளில் முடி என்று போற்றப்படுகின்ற இவ்விசை ஆனது மக்களை மட்டுமன்றி விலங்குகளையும் வசப்படுத்தும் ஆற்றல் பெற்றது என்பதை" காழ்வரை நில் லாக் கடுங்களிற்றொருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு" என்று கலித்தொகை அடிகள் புலப்படுத்துகின்றன இவ்வாறு இசைக்கலை சிறப்புப் பெறுகின்றது. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் அவதரித்த, ஈழத்து சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகள் சமாதி அடைந்த காரைதீவு புனித மண்ணில் 1984ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2ஆம் திகதி இவர் பிறந்தார பிறந்த திருமதி.எழில்வேணி சுதர்சன் இசைத்துறையில் பிரகாசித்து வருகிறார்.

சிவநாதன் மனோன்மணி தம்பதியருக்கு பிறந்த நான்கு பிள்ளைகளில் மூத்த புதல்வியான எழில்வேணி பிறக்கின்ற போதே இவரது குடும்பம் கலை குடும்பமாகவே இருந்தது. இவரது பாட்டனார் சண்முகம் துரையப்பா கூத்துக் கலையில் மிகவும் வல்லவர்.இவரது தந்தை வழியினரும் கலைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அதிலிருந்தே இவரது இசைக்கான பயணம் ஆரம்பமானது. 2006 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சங்கீத பாட ஆசிரியராக பயிற்சி பெற தெரிவு செய்யப்பட்ட இவர் அங்கு சுவாமி விபுலானந்தரின் இசைப் பணிகள் என்ற நூலையும் இவர் வெளியிட்டார். தொடர்ச்சியாக கல்முனை கார்மேல் பற றிமா கல்லூரியில் சங்கீத பாட ஆசிரியராக இணைந்து பல்வேறு சேவைகளை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றார். 2017 ஆம் ஆண்டு லயன்ஸ் கழகத்தினாலும் , இந்து கலாசார நிலையத்தினாலும் இடம்பெற்ற பொங்கல் விழாவின்போது நாட்டார் கவி என்ற தலைப்பில் தைப்பொங்கல் பாடல்களை இசைத்து அதற்கு கௌரவிப்பும் பெற்றார். 2020ஆம் ஆண்டு தை பொங்கல் விழா அம்பாறை மாவட்ட கலாச்சார திணைக்களத்தினால் கண்ணகி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற போது காரைதீவு பிரதேச செயலகத்தினால் வெளி யிடப்பட்ட நாட்டார் இசை சம்பந்தமாக நூல்களில் இவரது ஆக்கங்கள் இடம் பெற்றமையும் சிறப்பு வாய்ந்ததாகும். தேசிய இளைஞர் மன்றத்தினால் இடம்பெறும் மாவட்ட தேசிய மட்டப் போட்டியில் நடுவராக பங்குபற்றுதல்., இசைக் கச்சேரிகளில் நடுவர்களாக பங்களிப்பு செய்தல் , ஆலயங்களில் உற்சவ காலங்களில் ஊஞ்சல் பாடல்களை சிறப்புற பாடுதல், க.பொ.த உயர்தரம் , க.பொ.த சாதாரண தரசெய்முறை பயிற்சிக்கு நடுவராக கடமையாற்றுதல், கல்முனை பிரதேசத்தில் இடம்பெற்ற கலாச்சார விழாவில் நிகழ்ச்சிகள் வழங்கியமை, திருப்புகழ் நிகழ்வில் தலைமை விருந்தினராக அழைக்கப்பட்டு நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியமை, கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலை கீதத்திற்கு இசையமைத்துப் பாடியவர் என்ற பெருமையை பெற்றவர். இவ்வாறு பல நிகழ்வுகளை நடாத்தி இவர் பங்கு பற்றி சிறப்பு தனது திறமையை பயன்பெற செய்யும் பெண் ஆளுமை திருமதி. எழில்வேணி.சுதர்சன எதிர்வரும் காலங்களில் இசைத்துறைக்கு தனது பல்வேறு பங்களிப்புக்களையும் வழங்கி மேலும் தானும் இத்துறையில் சாதனைகள் புரிய கல்முனை நெற் மங்கையர் மகுடம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது.

மங்கையர் மகுடம்

ஜெனிதா மோகன்

# தோல்வியின் வெற்றி

என் பெயர் வெற்றி. எனக்கு பெயரில் மட்டும் தான் வெற்றி ஆனால் வாழ்க்கையில் பல விஷயங்களில் தோல்வி தான். மொத்தத்தில் வெற்றி எனக்கு அறிமுகம் இல்லாத ஒன்று ஆனால் தோல்வி என்னுடன் இருக்கும் நண்பன் போல்.

நான் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை ஒரே பளளியில் தான் படித்தேன். நான் ஆறாம் வகுப்பு படிக்கும் போது எனக்கு நிறைய ஓவியங்கள் வரைய வேண்டும் என்று ஆசை வந்தது. நிறைய ஓவியங்களை வரைய ஆரம்பித்தேன்.

நான் ஏழாம் வகுப்பு படிக்கும் போது என் பள்ளியில் நடந்த ஓவியபோட்டியில் கலந்து கொண்டேன். போட்டியில் சுபாஷ் சந்திர போஸ்சை வரைந்தேன். பள்ளியின் ஆண்டுவிழாவின் போது வெற்றி பெற்றவர்களை அறிவித்தார்கள் அதில் எனக்கு மூன்றாம் பரிசு கூட கிடைக்கவில்லை. நான் தோல்வியை சந்தித்தேன்.

நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது தினமும் ஓவியங்களை வரைந்து பார்க்க ஆரம்பித்தேன். அவ்வருடம் நடந்த போட்டியில் கலந்துகொண்டு காந்தியையும், போஸ்சையும் வரைந்தேன் அதிலும் தோல்வியுற்றேன். பின்பு ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போதும் நடந்த ஓவியப்போட்டியில் கலந்துக்கொண்டு மீண்டும் தோல்வியை கண்டேன்.

நான் பத்தாம் வகுப்பில் படிக்கும் போது என் நண்பர்கள் என்னிடம் ஒரு சில உதவி கேட்பார்கள். அது என்னவென்றால், அவர்களின் ரெகார்ட் (RECORD) நோட்டில் என்னை படம் வரைந்து குடுக்க சொல்வார்கள். நானும் வரைந்து கொடுப்பேன் அது எனக்கு நல்ல பயிற்சியாக இருந்தது. அப்படியென்றால் இந்த வருடம் நடக்கும் ஓவியப்போட்டியில் கண்டிப்பாக வெற்றி பெற்றுவிடலாம் என்று எண்ணி நம்பிக்கையோடு கலந்து கொண்டேன். ஒரு மேடையில் காமராஜரும், அண்ணாவும் பேசி கொண்டு இருப்பது போல் ஓவியம் வரைந்தேன். இம்முறை கண்டிப்பாக மூன்றாம் பரிசாவது எனக்கு கிடைக்கும் என்று எதிர் பார்த்தேன். ஆனால் இம்முறை தோல்வி அடைந்தேன். இனி ஓவியமே வரைய கூடாது என்றிருந்தேன்.


இவ்வளவு கஷ்ட பட்டும் தோல்வி அடைந்தேன். அப்படி என்றால் வெற்றி பெறுபவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பார்கள் என்று எண்ணி நான் கண்டிப்பாக மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும் என்று முடிவு செய்தேன். பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று பதினொன்றாம் வகுப்பிற்கு சென்றேன். அவ்வருடம் நடந்த ஓவியப்போட்டியில் என் பள்ளி ஆண்டு விழாவில் மேடையில் அண்ணா உரையாற்றி கொண்டு இருப்பது போன்றும், காமராஜர், கலாம், எம்.ஜி.ஆர் ஆகியவர்கள் மேடையில் அமர்ந்து கொண்டு இருப்பது போன்றும் ஓவியம் வரைந்தேன்.

அதில் எனக்கு மூன்றாம் பரிசு கிடைத்தது. நான் பெற்ற முதல் வெற்றி அது தான். விழா முடிந்ததும் என் பள்ளியின் தலைமை ஆசிரியர் என்னை சந்தித்து பாராட்டினார். என் ஓவியத்தை பள்ளியில் அவர் அறையில் வைக்க போவதாக கூறினார்.


போட்டியில் முதல் பரிசு வென்றவரை விட அவருக்கு என் ஓவியம் பிடித்திருக்கிறது. அதை கேட்டதும் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அப்பொழுது தான் நான் வெற்றி பெற்றுஇருக்கிறேன் என்பதை முழுமையாக உணர்தேன்.

நான் வெற்றி பெற்றதற்கு காரணம் என் தோல்விகள் என்று எனக்கு புரிந்தது. இது என் தோல்விக்கு கிடைத்த முதல் வெற்றி. என் தோல்விகள் தான் எனக்கு நிறைய பாடம் கற்றுக்கொடுத்து இருக்கிறது.இக்கதை வெற்றி பெற்றவனை விட தோல்வியுற்றவன் தான் சிறந்தவன் என்று கூறவில்லை. வெற்றி பெற்ற அனைவருக்கும் தோல்வி என்னும் பக்கங்கள் இருக்கும் என்பதை கூறுகிறது. வெற்றியை மட்டும் பார்க்காமல் அவர் அடைந்த தோல்விகளையும், கஷ்டங்களையும் பார்க்க வேண்டும் என்பது என் கருத்து.முடிந்தால் முயற்சி செய் , முடியவில்லை என்றால் பயிற்சி செய். வெற்றி நம்பிக்கை கொடுக்கும் , தோல்வி அனுபவத்தை கொடுக்கும். அனுபவமே சிறந்த ஆசான்.

**சி.தர்ச்சனா**
**திருகோணமலை**



அண்ணாத்துரை அகல்யா
நிர்வாக பிரிவு
பிரதேச செயலகம்
காரைதீவு





# பாண்டிருப்பு தீப்பள்ளயம்



கல்முனை மாநகர் பாண்டிருப்பில் அமைந்துள்ள இலங்கையின் வரலாற்று சிறப்பு மிக்க ஆலயங்களில் ஒன்றான ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் இடம்பெறும் காலமாகும். ஊலகை அச்சறுத்திக்கொண்டிருக்கம் கொவிட் நிலைமைகளால் ஆலய உற்சவங்கள் சுகாதாரதுறையின் ஆலோசனைக்கமைவாக நிறுத்தப்பட்டுள்ளன. அன்று இப்பிரதேசமே விழாக்கோலமாக காட்சியளிக்க 07.09.2021 அன்று திருக்கதவு திறத்தலுடன் பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய உற்சவம் ஆரம்பமாகியிருக்கவேண்டியது இம்முறை திருவிழா இடம்பெற வில்லை. இப்பிரதேச மக்கள் மனங்களில் அது கவலையாக இருந்தாலும் நாட்டின் நிலைமையை கருதி ஆலய உற்வசம் இடம்பெறாமை தவீர்க்கமுடியாததே. திருவிழா இடம்பெற வேண்டிய இந்த மாதத்தில் ஆலயத்தின் கடந்த வருட நினைவுகளை மீட்டிப்பார்ப்போம். மகாபாரத கதையினை அடிப்படையாகக்கொண்டு வரலாற்று நிகழ்வை வெளிப்படுத்தும ̇வகையில் சடங்குகள் நடைபெறும் பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம் இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது ஆலயமாகும்.

பஞ்ச பாண்டவர்களுக்காக இவ்வாலயம் அமையப்பெற்றதால் இக்கிராமத்திற்கும் பாண்டவர் இருப்பிடமாக ‘பாண்டிருப்பு’ எனும் நாமமும் பெற்றுள்ளது இவ்வாறு மிகவும் பழைமையான இவ்வாலயத்தின் நீண்ட வரலாற்றில் இருந்து சில விடயங்களை சுருக்கமாக பார்ப்போம்.

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயமானது தாதன் எனும் மாமுனியரால் கலிபிறந்து 4640 ஆம் வருடத்தில் எதிர்மன்ன சிங்க மன்னனின் காலத்-



தில் முதலில் அமைக்கப்பட்டதற்கான ஆதாரம் தாதன் கல்வெட்டில் உள்ளது. பின்நாட்களில் இவ்வாலயத்தில் விமலதர்ம சூரியன் மன்னன் 1594 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் ஆலயத்தை தரிசித்து தான தருமங்கள் வழங்கியதற்கான சான்றுகளும் இம்மன்னனின் ஆட்சிக் கால பதிவுளில் இருந்தும் அறியமுடிகிறது.

புதினெட்டு நாட்கள் நடைபெறும் உற்சவ கால திருவிழாக்கள் மகாபாரத சம்பவங்களை வெளிப்படுத்தும் வகையில் நடைபெறுகின்றமை இவ்வாலயத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும் முதல்நாள் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பூசைக்குரிய பொருட்களையும் வழிபாட்டுக்குரிய சிலைகளையும் எடுத்து ஊரின் வடபகுதியை சுற்றி கடலுக்குச்சென்று கடலகுளித்துக் கொண்டு ஆலயத்திற்கு வந்து பூசைகள் நடைபெற்று கொடியேற்றப்படும் ( நடு இரவு கடந்துவிடும்) இரண்டாம் நாள் புதன் கிழமை அதிகாலை கொடியேற்ற திருவிழா பூசையாக நடைபெறும பின்னர் மகாபாரதம் படிக்கும் ஏடு தொடங்கும் நிகழ்வு நடைபெற்று தொடர்ந்து மகாபாரதம் பாடி பயன் சொல்லுதல் திருவிழா இறுதி நாள்வரை தொடரும். ஏழாம் நாளை திங்கட்கிழமை இரவு கிருஷ்ண பகவான் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து வருதல் பாரத்தில் பஞ்ச பாண்டவர்களுக்கு துணையாக கிருஷ்ண பகவான் இணையும் சம்பவத்தை பிரதிபலிக்கும் நிகழ்வாக இது அமையும் ( சுவாமி எழுந்தருளல்) எட்டாம் நாள் இரவு சுவாமி எழுந்தருளல் திருவிழா

12 ஆம் நாள் சனிக்கிழமை இரவு கலியானக்கால் வெட்டிவருதல் இடம்பெறும் பதினாறாம் நாள் புதன் கிழமை வனவாசம் செல்லும் நிகழ்வு இடம்பெறும். பதினேழாம் நாள் வியாழன் நள்ளிரவு அருச்சுனர் தவநிலை நிகழ்வு பதினெட்டாம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை தீக்குழி மூட்டல் இடம்பெற்று மாலை தீப்பாய்தல் இடம்பெறும் மறு நாள் சனி பொதுமக்கள் பொங்கல் வைத்தலும் தீக்குழிக்கு பால்வார்த்தல் பாற்பள்ளயம் இடம்பெற்று மாலை சுவாமி மீண்டும் மாணிக்க பிள்ளையார் ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுதத்ல் செல்லல் இடம்பெறும்

18 நாட்கள் திருவிழக்கள் சிறப்பாக நடைபெறுவதுடன் பூசைகள் குடிகளுக்கும் சமூகங்களுக்கும் பகிரப்பட்ட முறையில் நடைபெற்று ஆலய உற்சவ காலத்தில் இப்பிரதேசமே கோலாகலமாக காட்சியளிப்பதுடன் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் வருகை தருகின்றனர்.







# இஸ்லாத்துடன் முரண்படாத சர்வதேச சட்டங்களை ஏற்க தலிபான்கள் தயார்

## அமெரிக்க பயங்கரவாதப் பட்டியலில் உள்ள பலரும் அமைச்சரவையில்

அமெரிக்காவால் தேடப்படும் பட்டியலில் உள்ள முக்கியமான நபர்கள், ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.33 அமைச்சர்களுடைய ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசாங்கத்தில், பிரதமர் முல்லாமொஹமட் ஹஸன்,பாதுகாப்பு அமைச்சரான முல்லா யாகூப், உள்துறை அமைச்சரான ஹக்கானி, பிரதிப் பிரதமர் அப்துல் கானி உள்ளிட்ட பலர்,அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் உள்ளவர்களாவர்.இந்த அமைச்சரவையில்,1996 முதல் 2001 வரை அமைச்சர்களாக இருந்த 14 பேரும்,குவான்தனமோ சிறையிலிருந்த 05 பேர் மற்றும் தலிபான்களின் இரண்டாம் மட்டத் தலைவர்கள் 12 பேரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானின் சகல குடியினங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், புதிய அமைச்சரவை உருவாக்கப்படுமென ஏற்கனவே தலிபான்கள் அறிவித்திருந்தனர். எனினும், பஸ்தூன் இனத்தைச் சேர்ந்தோர் மாத்திரமே இடைக்கால அமைச்சரவையில் உள்வாங்கப்பட்டு, பெண்களின் பிரநிதித்துவமும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதனால், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் உட்பட மாகாணத் தலைநகர் சிலவற்றிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.இந்த ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கையில் இருவர் உயிரிழந்தனர்.

இதனிடையில்,ஆப்கானிஸ்தானைக் கட்டியெழுப்பும் பணியில்,முன்னாள் தூதுவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்கள் சகலரும் உதவ முன்வர வேண்டுமென ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசின் பிரதமர் முல்லா மொஹமட் ஹஸன் அழைப்பு விடுத்துள்ளார்.இவர்கள் அனைவரது பாதுகாப்புக்களும் உத்தரவாதமளிக்கப்படுவதுடன்,நேட்டோப் படைகளுடன் இணைந்து பணியாற்றிய சகலருக்கும் பொதுமன்னிப்பளிக்கப்படுவதாகவும் பிரதமர், முல்லாமொஹமட் ஹஸன் தெரிவித்தார்.அல்ஜெஸீரா தொலைக்காட்சிக்கு புதிய பிரதமர் தெரிவித்ததாவது

பழைய பகைகளை மறந்து ஒன்றுபடுதல் மாத்திரம்தான், அழிந்துபோன ஆப்கானிஸ்தானைக் கட்டியெழுப்புவதற்கான வழி. எனவே,நாட்டை விட்டுத் தப்பியோடிய சகலரையும் மீள வருமாறு அழைக்கிறோம். இஸ்லாத்துடன் முரண்படாத சர்வதேசச் சட்டங்கள் சகலதையும் ஏற்றுக் கொள்ளத்தயார். ஆதிக்க சக்திகளை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான போரில் உயிர்துறந்தோர், அங்கவீனமானோர் அனைவருக்கும் நாங்கள் நன்றிக் கடனுடையவர்கள்.ஷரீஆ சட்டத்தின் அமுலுடன் முழு சுதந்திர இஸ்லாமிய தேசமாக ஆப்கான் திகழும் என்றார்.

சீனா,உஸ்பெகிஸ்தான்,பாகிஸ்தான்,சவூதிஅரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் என்பன தலிபான்களின் இஸ்லாமிய அரசை ஏற்றுக்கொண்டதாக அறிவித்துள்ளன.எனினும், ஐரோப்பிய யூனியன்,அமெரிக்கா என்பன தலிபான்களின் நடத்தைகளைப் பொறுத்தே இது தீர்மானிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளன. தலிபான் அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் முல்லா உமரின் மகனே, இடைக்கால அரசின் பிரதமராகத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.ஆப்கானில்,நேட்டோ தலைமையிலான இராணுவ நடவடிக்கையின் போது,முல்லா உமர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## ஆப்கானிஸ்தான் அரசுக்கு 3.10 கோடி டொலர் உதவியை அறிவித்தது சீன அரசு

தலிபான்களின் இடைக்கால அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டுள்ள சீனா,ஆப்கான் கட்டுமானப்பணிகளுக்கு உதவ 3.10 கோடி டொலர் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹூவா சுன்யின் இதுபற்றித் தெரிவித்தார். ஆப்கானிஸ்தானின் அண்டை நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடனான சந்திப்பிலே இந்த உதவிகள் பற்றி அவர் அறிவித்தார். இதன்படி ஆப்கன் மக்களுக்கு உணவு, குளிர்காலத்தை சமாளிக்கும் பொருட்கள், தடுப்பூசிகள், மருந்துகள் போன்றவை தலிபான் அரசிடம் வழங்கப்படவுள்ளன.மேலும், முதற்கட்டமாக 30 லட்சம் தடுப்பூசிகளை வழங்கவும் சீனா முன்வந்துள்ளது.

சீனாவின் மேற்குப்பகுதியான ஜின்ஜியாங்கின் வக்கான் பகுதிவரை ஏறக்குறைய 80கி.மீ எல்லையை ஆப்கானிஸ்தானுடன் சீனா பகிர்ந்துள்ளது.இந்தப் பகுதியில், வீதிகளை அமைத்தல் மற்றும் புனரமைப்புப் பணிகளில் அதிகமான முதலீட்டை சீனா செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தலிபான்களின் இடைக்கால அரசாங்கம் குறித்து இதுவரைக்கும் இந்தியா எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்காத நிலையில், ஆப்கானிஸ்தானுக்கு உதவ சீனா முன்வந்துள்ளமை இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கலாம் சர்வதேச ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.



## அஸ்ட்ரா செனிகா ஏற்றியோருக்கு நரம்புக் கோளாறு இல்லை

அஸ்ட்ரா செனிகா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு மிகவும் அரிதாக,நரம்பு கோளாறு ஏற்படும் ஆபத்திருப்பதாக ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு கழகம் தெரிவித்துள்ளது. ‘கில்லென்~பார்ஸ் சிண்ட்ரோம்’ என்று அழைக்கப்படும் அரிய வகை நோய் பாதிப்பானது நோய் எதிர்ப்பு சக்தியால் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதைக் குறிக்கிறது. இது அஸ்ட்ரா செனிகா, ஜான்சன், மொஷடோனா ஆகிய தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களுக்கு மிகவும் அரிதாக இந்நோய் ஏற்படும் ஆபத்திருப்பதாக ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு கழகத்தின் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தடுப்பூசியால் ஏற்படும் இந்த பாதிப்பு ‘வாக்ஸ் செர்வியா’ என்று அழைக்கப்படுகிறது.

இருப்பினும் மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே இந்த பாதிப்பு பதிவாகி இருப்பதாக கூறப்படுகிறது. கடந்த ஜூலை 31 ஆம் திகதி வரை உலகம் முழுவதும் 59.2 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டதில், வெறும் 833 பேருக்கு மட்டுமே இத்தகைய நரம்பு கோளாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு கழகம் தெரிவித்துள்ளது.



## ஐடா சூறாவளியால் பாதிப்புற்ற பகுதிகளில் மீட்பு பணிகள் துரிதம்

அமெரிக்காவின் பல மாகாணங்களில் வீசிய ஐடா சூறாவளியால் இயல்புநிலை பாதிக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கானோர் நிர்க்கதிக்குள்ளாகி உள்ளனர். வெள்ளம்,மின்சாரத் துண்டிப்பு,தொடர்பாடல் நிறுத்தம் மற்றும் போக்குவரத்து சீர்குலைவுகளாலே இந்நிர்க்கதி ஏற்பட்டுள்ளது.

லூயிசியானா, நியூயார்க், நியூஜெர்சி, நியூ ஆர்லென்ஸ் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் கடந்த வாரம் இப்புயல் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், ஐடா புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 82 ஆக அதிகரித்துள்ளது. புயலால் ஏற்பட்ட வெள்ளம், மின் தடை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.ஐடா சூறாவளியால் பாதிப்புற்ற பகுதிகளில் மீட்பு பணிகள் துரிதம் அமெரிக்காவின் பல மாகாணங்களில் வீசிய ஐடா சூறாவளியால் இயல்புநிலை பாதிக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கானோர் நிர்க்கதிக்குள்ளாகி உள்ளனர். வெள்ளம்,மின்சாரத் துண்டிப்பு,தொடர்பாடல் நிறுத்தம் மற்றும் போக்குவரத்து சீர்குலைவுகளாலே இந்நிர்க்கதி ஏற்பட்டுள்ளது.

லூயிசியானா, நியூயார்க், நியூஜெர்சி, நியூ ஆர்லென்ஸ் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் கடந்த வாரம் இப்புயல் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், ஐடா புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 82 ஆக அதிகரித்துள்ளது. புயலால் ஏற்பட்ட வெள்ளம், மின் தடை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.